# வானலைகளில் எங்கள் கவிதைகள்

பாகம் – 2




தொகுப்பாசிரியர்

பெண்ணை தெய்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MANN (ERDE) M...
V. Siva...
Am Windhövel ...
47249 Duisbu...
Germany

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரி.ஆர்.ரி. தமிழ் ஒலி வானொலியில்

கவிஞர் வண்ணை தெய்வம் அவர்களால் தொகுத்து வழங்கப்பட்ட 'கவிஞர்கள் சாங்கமம்' நிகழ்ச்சியில் ஒலித்த கவிதைகளின் தொகுப்பு


T. R. T.
P. O. BOX: 28
93701-DRANCY CEDEX
France
Tel:-00 33 1 48 30 44 55 Fax:- 00 33 1 48 30 41 43
e-mail: www.trt2@wanadoo.fr


TAMIL OLI RADIO


நந்தினி பதிப்பகம்
1-Allee Raoul Duffy
Bat:-Bretagne
Res:-Fovtaine
93420-villepinte
France



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

---------

நூல் தலைப்பு
வானலைகளில்
எங்கள் கவிதைகள்.

தொகுப்பாசிரியர்
வண்ணை தெய்வம்

அனுசரணை
T.R.T. தமிழ் ஒலி
வானொலிக் கலையகம்

மொழி
தமிழ்

பதிப்பாண்டு
2001

பதிப்பு விபரம்
முதல் பதிப்பு

பதிப்பு
நந்தினி பதிப்பகம்

நூல் கட்டமைப்பு
கிருஷ்ணா அச்சகம்
பாரிஸ்

உரிமை
தொகுப்பாசிரியருக்கு

அட்டை ஓவியம்
சுகந்தினி சுதர்சன்

கணனிப்பதிப்பு
சாந்தினி- வரதராஜன்
தெய்சியா- வண்ணை தெய்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வான் அலைகளில்
# எங்கள் கவிதைகள்
## பாகம்- 2

**T.R.T. தமிழ் ஒலியில் கவிஞர்கள் சங்கமத்தில் ஒலித்த கவிதைகளின் தொகுப்பு**

*அனுசரணை* **T.R.T.** *தமிழ் ஒலி கலையகம்*


தொகுப்பாசிரியர்
**வண்ணை தெய்வம்**



**நந்தினி பதிப்பகம்**
**1-Allee Raoul Duffy**
**Bat:-Bretagne**
**Res:-Fovtaine**
**93420-villepinte**
**France**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்.

மண் மீட்புப் போரில்
மாவீரர் ஆகிப்போன
உடன் பிறவாத் தம்பி

**இ. இரவி**

அவர்களுக்கு
இராமநாதன் வீதி
வண்ணார் பண்ணை கிழக்கு
யாழ்ப்பாணம்.
தமிழ் ஈழம்

அன்நாளில்.. ..

நான் மேடையில் வேடம் கட்டிக்கொண்டிருந்த காலங்களில் எனது ஒப்பனைப் பெட்டியைச் சுமப்பதனையே பெருமையாகக் கொண்டவன்.

பின்நாளில்

மண் மீட்புப் போரில் தனது தோழில் போர்கருவியைச் சுமந்து என்னை பெருமைப்பட வைத்தவன்.

இன்று

தமழ் மண்ணுக்கே உரமாகி, மக்கள் மனங்களில் ஒளியாகி நிற்கும் என் உடன் பிறவாத் தம்பி இரவி, க்கு

*வண்ணை தெய்வம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

இந்த நூலின் தொகுப்பாசிரியர் வண்ணை தெய்வத்துடன் எனக்கு நேரடிப் பரிச்சியம் ஏற்பட்டு இரண்டு ஆண்டுகள்தான் இருக்கும்.

ஆனால் இவ்வளவு குறுகிய காலத்தில் எனது மனதில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்திய மிகச்சிலரில் இவரும் ஒருவர்.

ஒரு மனநல மருத்துவர் என்ற எனது தொழில் ரீதியில், எனது அன்றாட வாழ்வு மனித உள்ளங்களின் ஆழங்களை ஆராயக்கொண்டது. எனது உள்ளத்தில் உள்ள இனிய சுகானுபவங்களை, செழிப்பான மனப் பதிவுகளை, வண்ணை தெய்வம் ஏற்படுத்தியுள்ளார்.

வண்ணையின் எழுத்து வடிவங்களையும், அவரது வானொலித் தயாரிப்புக்களையும் ஆராயும்போது, அவைகளுக்கு அத்திவாரமாக அமைந்த அவரது ஆழமான மனிதைபிமான உணர்வையும், சமூக அநீதி எங்கிருந்து எந்த வடிவத்தில் வந்தாலும், அதைச் சங்காரம் செய்ய போர்க்கோலம் பூணும் அவரது சமூகப் பிரஞ்சையையும் உணராமல் இருக்கமுடியாது.

தாய் மொழிமீதும், தமிழ்க் கலாச்சார விழுமியங்கள் மீதும் அவர் கொண்ட பற்று அளப்பரியது. உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவரல்ல வண்ணை தெய்வம். அவர் எதை நினைக்கின்றாரோ அதை நிட்சயம் செய்து காட்டுவார். செய்யத்துணியாத எதையும் அவர் சொல்லவே மாட்டார். சமகாலத் தமிழ்ப் படைப்பாளிகளுள் இவர் முன்னணி வரிசையில் இடம்பெறுகின்றார். கவிதைகள், உருவகக் கதைகள், சிறுகதைகள், மூலம் இவர் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது தயாரிப்பில் **T.R.T.**தமிழ் ஒலி வானொலியில் பல நிகழ்ச்சிகள் அமைந்திருக்கின்றது. குறிப்பாக "கவிஞர்கள் சங்கமம்" நிகழ்ச்சியைப்பற்றி கூறவேண்டுமானால் புலம் பெயர்ந்த நாடுளில் வாழும் புதிய தலைமுறை எழுத்தாளர்களுக்கு கிடைத்த வரப்பிரசாதம் என்றே சொல்லவேண்டும்.

இலை, மறை, காயாக இருந்துள்ள இளைய சமுதாயத்தின் இலக்கியப் படைப்புக்களைஇனம் கண்டுகொண்டு, அவற்றை நெறிப்படுத்தி களம் வகுத்துக் கொடுத்து வளர்த்துவிடுவது ஊடகங்களின் தலையாய கடமையாகும். அந்த வகையில் "கவிஞர்கள் சங்கமம்" என்ற வானொலி நிகழ்ச்சி மூலம் தொலைபேசி வாயிலாக பல கவிஞர்களுக்கு வானொலியில் கவிதை அரங்கேற்றம் செய்த வண்ணை தெய்வம் அதைவிட ஒருபடி மேலே சென்றுள்ளார்! அதை நிலை நாட்டுவதுதான் இந்த நூல்.

"கவிஞர்கள் சங்மம்" என்னும் நிகழ்ச்சியில ' அவர் அரங்கேற்றிய கவிதைகளில் சிலருடைய கவிதைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை நூலாக்கி தானே வெளியிடுகின்றார்.

காற்றினிலே ஒலித்த கவிதைகள், காற்றோடு காற்றாக மறைந்துவிடாமல் அவைகளுக்கு ஒரு வரலாற்றுப் பதிவைத் தருகின்றார் தம்பி வண்ணை தெய்வம்.

வானொலி ஒரு பலமான ஊடகம் என்பதனை நாம் ஏற்றுக்கொள்ளும் அதே வேளையில், புதிய படைப்பாளிகளுக்கு எழுத்து ரீதியான ஒரு வரலாற்றுப் பதிவும் இன்றியமையாதது என்பதனை சகல ஊடகங்களும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பது எனது பணிவான வேண்டுகோள்.

அந்த வகையில் புதிய படைப்பாளிகளை வளர்த்துவிட **T.R.T.** தமிழ் ஒலியும், வண்ணை தெய்வம் எடுத்துக்கொண்ட இந்த முயற்சிக்கு உலகத் தமிழர்கள் தோழ் கொடுத்து உதவ வேண்டும்.

டாக்டர் க. இந்திரகுமார்
லண்டன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

கவிதை என்பதே மனதின் ஆழத்திலிருந்து பீறிடும் உணர்வுகளைக் கொணர்வது

கவிதை எண்ண அலைகளின் வெளிப்பாடும் ஆகின்றது.

புறச்சூழலில் எழுகின்ற அவலங்கள், அடிமைத்தனங்களின் கோபங்கள், கறுப்பாகித்தந்த சோகங்கள், காதல் தருகின்ற சுகங்கள், வலிகள், இவைகளின் வெளிப்பாடே கவிதையாகின்றது.

நல்ல மனங்களில் இருந்து வார்த்தைகளைத் தொடுக்கவிருக்கும் கவிதைகள் வரவேண்டும்.

இங்கு புலம் பெயர் சூழலில் பலருக்கு படைப்பு முயற்சிகள் இயல்பாக வந்திருக்கின்றது.

இது தொடரும் காலதேச வர்த்தமனங்களை கடந்து நிற்கும்.

அதற்கு T.R.T. தமிழ் ஒலியின் முன்னெடுப்பில் திரு. வண்ணை தெய்வத்தால் தொகுக்கப்பட்ட இக் கவிமாலை நிச்சயம் மண்ணில் பிரகாசிக்கும். எனது வாழ்த்துக்கள்.

கூடவே இப்பாரிய பணிக்கு தோழ் கொடுக்கின்ற திரு. வண்ணை தெய்வத்திற்கு தோழ் கொடுக்கும் T.R.T. நிர்வாகத்தினரையும் பாராட்டாமல் இருக்கமுடியாது.

கவிதைகள் வரம்புகளை உடைக்கவேண்டும்!
மாணிக்கப் பரல்களைப்போல.. ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேர்களைத் தொலைத்தவர்களா நாம்? இல்லையே. எமது விழுமியங்களை பேணுகின்றவர்களில் நாமும் முன்னோர்கள்தான்.

இங்கு பதியம் போட்டது அவ்வளவுதான். வேர்கள் எம் செம்மண்ணில்த்தான். பாராட்டுக்கள்.

இந் நூல்ப்பணிக்கும், அதனைத் தொடுத்த கவிமூலங்களுக்கும், வெளிச்சம்தர ஆர்வலர்கள் முன்வரவேண்டும்.

இன்னும் பல ஆண்டுகள் கழிந்த பின்னர் என்னைப்போல நூற்கண்காட்சி செய்பவர்களுக்கு இந்த நூலும் ஆவணமாக இடம்பெறும்.

வாழ்த்துக்களுடன்
*முல்லை அமுதன்*
லண்டன்

முல்லை அமுதன் கதைகள் ,கவிதைகள், நாவல்கள், என பல நூல்களை எழுதியிருக்கின்றார். அண்மையில் லண்டனில் ஈழத்தமிழ் எழுத்தாளர்களின் நூல் கண்காட்சியை நடாத்திய பெருமைக்குரியவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அணிந்துரை

பிறப்பவர்கள் எல்லோரும் என்றோ ஒருநாள் இறப்பது என்பது மட்டும் உறுதி. ஆனால் இறப்பதற்கு முன்னர் எங்களது மனங்கள் திருப்திப்பட்டுக்கொள்ளும் வகையில் நாங்கள் ஏதாவது சாதித்திருக்கவேண்டும்.

அதற்காக சந்திரமண்டலத்தில் வலம் வரவேண்டும் என்பது அல்ல அர்த்தம். எங்களது திறமைக்கேற்ப நாம் ஏதாவது சாதிக்கவேண்டாமா?

அந்தவகையில் வசதியானதும், வலிமையானதும், மொழிக்கு உயிராக இருப்பதுமான கவிதைத்துறையைத் தேர்தெடுத்து. கவிதை புனைந்து. அதில் முத்திரையும் பதித்திருக்கின்றார்கள் இந்த நூலில் கவிதை எழுதியிருக்கும் படைப்பாளிகள்.

காலத்தை பதிவு செய்து கொள்வதற்கு மனிதன் கண்டெடுத்த வசதியான கலன்கள்தான் கவிதைகள்

வேறெந்தப் பதிவுகளையும்விட கவிதைகள் மனித மனங்களில் ஆழமாக பதிந்துவிடுபவை என்பதனை அறிந்து கொண்டவர்கள் கவிஞர்கள். காரணம்! கவிதைதான் இறந்துபோபன காலங்களை நயமாக இரைமீட்கவும், துளிர்த்துவரும் காலங்களை ஆழமாக, பலமாக, அத்திவாரமிடவும். மனங்களில் நயமாக, இதமாக, பதியக்கூடியவை.

காலம் மரணத்தை உறுதிப்படுத்துகின்றது. கவிதையோ வாழ்க்கையை நியாயப்படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதையின் மிகப்பெரிய சக்தி என்னவென்றால் மேடைப்பேச்சாளனின் பேச்சைவிட! மிக ஆழமாக, வேகமாக, மக்களது மனங்களில் குடிகொண்டு விடுவதுதான்.

கவிதைகள் மனித மனங்களில் நிரந்தரமாக வாழ்வதுடன் மனிந்தங்களை ஆழுகின்றதும் கூட.

விதை முளையாகி, அரும்பாகி, மலர் -பூ -பிஞ்சு- காய் -கனி □என படிப்படியாக பரிணாமம் அடைவதைப்போல கவிதையும் கருவெடுத்து உருவெடுத்து நயமாக வருவதனால் மனங்களில் இடம்பிடிப்பதில் வியப்பென்ன இருக்கமுடியும்.

உண்மைகளை விளக்கமாக, சுருக்கமாக, மக்கள் மனங்களில் பதியவைப்பதும் கவிதைகள்தான்.

வாழ்வை வியக்கச்சொல்கின்றது கவிதை! வியக்கவைக்கின்றது கவிதை!

அப்படியான கவிதைகளைப் படைப்பவர்களை நான் எனது தாயைப்போல நேசிக்கின்றேன்.

நண்பர் வண்ணை தெய்வம் அவர்கள் பல துறைகளில் முத்திரை பதித்து வந்தாலும்! கவிதைத் துறையில்த்தான் தனித்து நிற்கின்றார். ஆதலால்த்தான் வளர்ந்துவரும் கவிஞர்களை இனம்காண்பதில் அவர் முதன்மையாக நிற்கின்றார்.

அவருடைய அந்த உயர்ந்த எண்ணம்தான இந்த கவிதைத்தொகுப்பு.

வண்ணை அவர்களின் இந்த முயற்சிக்கு **T.R.T.** தமிழ் ஒலி என்னும் ஊடகம் பக்கபலமாக நிற்கின்றது. அதற்காக எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள் **T.R.R.** நிர்வாகத்தினர்க்கு.

வெளிவரவிருக்கும் "வானலைகளில் எங்கள் கவிதைகள் பாகம் மூன்றில்" இன்னும் பல புதிய கவிஞர்கள் அறிமுகப்படுத்தப்பட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதாக வண்ணை தெய்வம் அவர்கள் தெரிவித்திருக்கின்றார். அவரின் இந்த முயற்சியும், இப்படியான துணிவும், என்னை வியக்கவைக்கின்றது. தனது எழுத்துக்களை நூலாக்கவேண்டும் என சிந்திக்காது! இலை, மறை, காயாக, இருக்கும் கவிஞர்களை அரங்கத்திற்கு கொண்டு வந்திருக்கும் இவரின் முயற்சியைப் பாராட்டாமல் இருப்பது வைரக்கல்லை உப்புக்கற்களுக்குள் மறைப்பது போன்ற செயலுக்கு ஒப்பாகும்.

அந்த வகையில் வண்ணை தெய்வம் அவர்களை பாராட்டிவைக்கும் இந்த நேரத்தில், வண்ணை தெய்வத்தின் பார்வைக்குள் தங்களது கவிதைகளை கொண்டு சென்றுள்ள அனைத்துக் கவிஞர்களுக்கும் எனது வாழ்த்துக்கள்.

நீர் குழத்தில் தங்குவதால் எந்தவிதமான பயனும் இல்லை. அது ஆற்றில் கலந்து நீண்ட பயணம் செய்து அனைத்து உயிரினங்களுக்கும் பயன் கொடுக்க வேண்டும்.

அதே போன்று **T.R.T.** தமிழ் ஒலியில் "கவிஞர்கள் சங்கமத்தில்" சங்கமித்து இந்த நூலில் பதிவு செய்யப்பட்டிருக்கும் கவிதைகளும் படிப்பவர்களுக்கு ஏதோ ஒரு வகையில் பயனுள்ளதாக அமையும் என்பது எனது நம்பிக்கை.

இன்றைய எமது நம்பிக்கைதான் நாளைய எமது வெற்றி.

அந்த வெற்றியை நோக்கி தொடர்ந்து பயணிப்போம்.

அன்புடன்

ரவி மாஸ்ற்றர்

T.R.T. தமிழ் ஒலி பேச்சாளர் பொறுப்பாளர்

**Raveenthiran- Tharmlingam**

**Stefana Str-51a. J59075 Hamm**

**GERMANEY**

**Tele:-00 49 2381 956609**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமைக்குரல்

நேயர்களே! வாசகர்களே!

T.R.T.தமிழ் ஒலியில் "கவிஞர்கள் சங்கமத்தில்" ஒலித்த கவிதைகளை நூலாக தொகுத்தால் என்ன? என வண்ணை தெய்வம் அவர்கள் எங்களிடம் அபிப்பிராயம் கேட்டபோது, எங்கள் அனுசரணையைக் கொடுத்தோம். ஆதரவைக் கொடுத்தோம்,

ஆனாலும் இருந்த குறுகிய காலத்தில் நூலை உருவாக்கிவிட முடியுமா? என்னும் ஐயப்பாடும் எம்மில் இல்லாமல் இல்லை!

ஆனாலும், எம்மை வியக்க வைக்கும் விதமாக வண்ணை தெய்வம் அவர்கள் பாகம் ஒன்று. பாகம் இரண்டு. என இரண்டு நூல்களை உருவாக்கியிருக்கின்றார்.

எங்கள் "தமிழ் ஒலியில்" கவிதை பாடிய நேயர்கள் எவரும் ஏமாற்றம் அடைந்துவிடக்கூடாது என்னும் உயர்ந்த நோக்கில்த்தான் இந்த இரண்டாவது பாகமும் வெளிவந்திருக்கின்றது. என்பது வெள்ளிடை மலை.

இந்த இரண்டு நூல்களையும திட்டமிட்டபடி உரிய நேரத்தில் வெளியிட உருவாக்கித்தந்த வண்ணை தெய்வம் அவர்கள் எங்கள் பாராட்டிற்குரியவர்கள்.

இந்த நூலில் இடம்பெற்ற கவிதைகளை புனைந்தவர்களும் எங்கள் பாராட்டிற்குரியவர்களே.

இந்த முயற்சி தொடரும். எங்கள் பணியும் தொடரும்

உங்கள் ஆதரவு இருக்கும் வரைக்கும்.

**T.R.T.தமிழ் ஒலி**
வானொலி நிர்வாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வண்ண வரிகள்
# வண்ண வரிகள்
# வண்ண வரிகள்

**'நினைத்தால் வருவது அல்ல கவிதை- மனம்
கனத்தால் வருவது கவிதை'**

**'எப்போதும் வருவது அல்ல கவிதை
எப்போதாவது வருவது கவிதை'**

*இவை எனது மதிப்பிற்குரிய எழுத்தாளர் வார்த்தைச்சித்தர் வலம்புரி ஜான் அவர்கள் எழுதிய வண்ண வரிகளாகும்.*

*ஆமாம் கவிதை எழுதவேண்டும் என எண்ணி பேப்பரையும் பேனாவையும் எடுத்துவிட்டால் மட்டும் கவிதை எழுந்து ஓடி வந்துவிடுவதில்லை.*
*கடிதம் எழுதுவதற்குக்கூட நாம் எவ்வளவு சிந்தனை செய்கின்றோம்! அப்படியிருக்கும்போது கவிதை மட்டும் நினைத்தமாத்திரத்தில் வந்துவிடுமா? ஆனால் கவிதை எழுதவேண்டும் என நேரத்தை ஒதுக்கி சிந்தனை செய்து, அதற்கான முயற்சியில் ஈடுபடுகின்றார்களே அவர்களின் ஆர்வத்தை குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது.*

*சிந்தனையே ஒருவனை முழு மனிதனாக்குகின்றது. நாம் சிந்திக்காது செயற்படுவோமானால் எமக்கும் மிருகங்களுக்கும் என்ன வித்தியாசம்? (மிருகங்கள்கூட சில சமயங்களில் சிந்தித்து நிதானித்தே செயல்படுகின்றன.)*

*இந்த கவிதைத்தொகுப்பில் இடம்பிடித்திருக்கும் கவிஞர்களில் சிலர் கவிதை எழுதுவதற்கு முயற்சித்திருக்கின்றார்கள்! அதேவேளையில் சிலரது கவிதைகள் பிரமிக்கத்தக்கவகையில் இருக்கின்றன.*

*புத்திஜீவிகள் யாராவது எடுத்த எடுப்பிலேயே இவைகள் கவிதைகளே அல்ல என சிகப்பு அறிக்கை தாக்கல் செய்துவிடலாம்! அவர்களுக்கு ஒன்றைமட்டும் சொல்லிவைக்கின்றேன். இவைகள் எல்லாம் கவிதைகள் இல்லாமல் போகட்டும்? ஆனால் விதைகள்! என்பதையாவது ஒப்புக்கொள்ளுங்கள். இல்லாதுபோனால் காலம் கடந்து ஒப்புக்கொள்ளுவீர்கள்!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தலைமுறையில் வளர்ந்துவரும் இவர்கள் போன்ற புதிய சிந்தனையாளர்களை தட்டிக்கொடுக்க தவறுபவர்கள் வளரும் தலைமுறைக்கே துரோகம் இழைப்பவர்களாவார்கள்.

இந்தத் தொகுப்பில் எழுதியுள்ள கவிஞர்கள் எவரையும் நான் எடைபோட்டுப்பார்த்து ஏற்றுக்கொள்ளவில்லை. ஆர்வம் உள்ளவர்களின் கவிதைகள் அதிகம் இடம்பெற்றிருக்கின்றன. இதுவே போதும் என எண்ணிவர்களின் கவிதைகள் அவர்கள் விருப்பப்படி பதியப்பட்டிருக்கின்றன.

பொதுவாக இவர்களின் கவிதைகளைப்பற்றி கூறவேண்டுமானால், அம்மாவின் கைகளால் உணவு உண்ட அன்றைய நாட்கள் நினைவிற்கு வருகின்றது!

சில நாட்களில் ஐந்தாறு கறிகளுடன் அமுதம் படைத்ததும் உண்டு. வீட்டில் எதுவும் இல்லாத நாட்களில் பழைய சோறும் அம்மியில் அரைத்த பச்சடியும் குழைத்து உருண்டையாக பரிமாறுவார்கள்.

அதுவும் அமிர்தமாகவே இருக்கும். அப்படித்தான் இந்தத் தொகுப்பில் இடம்பெற்றிருக்கும் கவிதைகள் அனைத்தும்.

கவிதை அழகாக எழுதக்கூடிய சில இலக்கிய நண்பர்களே என்னிடம் கேட்டார்கள் "ஒரு தலைப்பிற்கு பலரை கவிதை எழுத வைக்கின்றீர்களே! இது என்ன கவியரங்கமா? முதலாவது கவிதை படித்தவரைப் பார்த்து அடுத்தவர்கள் கவிதை எழுதிப் படிக்கின்றார்கள் ஏன் இப்படிச் செய்கின்றீர்கள்? என்றார்."

அவருக்கு நான் சொன்னேன்." பேரறிஞர் பெர்னாட்ஷாவிடம்ஒருவன் அற்புதமான ஓவியம் ஒன்றைக் காண்பித்து அது பற்றிய அபிப்பிராயம் கேட்டானாம்.

ஒரு மனிதன் சிங்கத்தின் மார்பைக் கிழித்து தனது வீரத்தைக் காட்டுவது போன்ற ஓவியம் அது.

ஷா அந்த ஓவியத்தைக் கூர்ந்து பார்த்துவிட்டுச் சொன்னாராம் "மிக அருமையான ஓவியம் இது. ஆனால் இதன் அடுத்த பக்கத்தையும் பார்க்கவேண்டும். இந்த ஓவியத்தைத் தீட்டியவன் மனிதன். இந்த ஓவியத்தை ஒரு சிங்கம் தீட்டியிருந்தால் எப்படி இருக்கும் என் யோசித்துப் பார்க்கின்றேன்!" என்றாராம்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கருத்து, ஒவ்வொரு சிந்தனை, இருக்கின்றது. இந்தப் புத்தகத்தை முழுமையாகப் படிப்பவர்களுக்கு அது புரியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்குள்ள கவிதைகளில் இலக்கிய நயம் குறைந்த கவிதைகள்கூட ஒவ்வொரு தத்துவங்களை தங்களுக்குள் அடக்கி வைத்திருக்கின்றன.

ஒரு பள்ளத்தாக்கு விசுவரூபம் எடுத்து மலைச் சிகரங்களையெல்லாம் திகைக்க வைப்பதுபோல! பண்டிதர்களைக்கூட வியக்கவைக்கின்ற கவிதைகளையும் பதிவுசெய்திருக்கின்றார்கள் பலர்.

காலம் இவர்களை இதுவரைகாலமும் வெளிச்சத்திற்கு கொண்டுவந்து காட்ட தவறிவிட்டாலும் T.R.T. தமிழ் ஒலி, "கவிஞர்கள் சங்கமம் மூலம் இனம் கண்டு வெளிச்சத்தின் முன்னே நிறுத்தியிருக்கின்றது.

வருங்காலங்களில் இந்த வெளிச்சங்கள் தங்கள் வீட்டுக்குள் மட்டும் வெளிச்சம் கொடுத்துக் கொண்டிருக்காமல் நாட்டுக்கும் வெளிச்சம் கொடுப்பார்கள் என்பது எனது அசைக்கமுடியாத நம்பிக்கை.

இந்தக் கவிஞர்களுக்கு தங்களது எழுத்துக்கள்மீது அவர்களுக்கே நம்பிக்கை பிறக்கவேண்டும் என்பதற்கான சிறு முயற்சிதான் இந்த நூலின் பிறப்பு.

இவர்கள் அனைவரிடமுமே தனித்தனியாக தங்களது கவிதைத் தொகுதிகளை வெளியிடக்கூடிய ஆற்றல் இருக்கின்றது. வருங்காலங்களில் நிச்சயம் அவை வெளிவரும் என்பது எனது அழுத்தமான நம்பிக்கை.

இந்தக் கவிஞர்களுக்கும் இங்கு ஒன்றை சொல்லிவைக்க ஆசைப்படுகின்றேன். உங்கள் எழுத்துக்கள்மீது நீங்கள் நம்பிக்கை வையுங்கள். நீங்கள் எழுதிய கவிதையை நீங்கள் காதலியுங்கள்.

- **மனிதன்தான் சிலையை உருவாக்கினான். பின்பு சிலையை கடவுள் ஆக்கிவிட்டு தனது படைப்பின் காலடியில் மனிதனே விழுந்து கும்பிடுகின்றான்.**

- **மனிதன்தான் பணத்தை கண்டுபிடித்தான். பின்பு அந்தப் பணத்திலேயே மனிதன் மயங்கிக் கிடக்கின்றான்.**

- **மனிதன்தான் இயந்திரங்களைக் கண்டுபிடித்தான். இன்று இயந்திரங்கள் இல்லாமல் வாழமுடியாமல் அவைகளுக்கு கட்டுப்பட்டு வாழ்கின்றான்.**

நாகரீகத்தின் வரலாற்றை உற்றுப்பார்த்தால் தனது ஒவ்வொரு படைப்பினிலும் மனிதன் மயங்கி அவைகளுடன் ஒன்றித்துவிட்டதைக் கண்கூடாகப் பார்க்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைபோல உங்கள் கவிதைகளில் நீங்கள் மயங்குகின்ற காலம் உருவாகும்.

சிந்தியுங்கள். சிந்தனைக்கு வர்ணம் தீட்டுங்கள். சித்திரமாக்குங்கள்.

இந்தத் தொகுப்பினிலே மலரான, வாடாத உங்களது கருத்துக்களை வாசகசாலையாக்கி நடமாட விட்டிருக்கின்றேன்.

இந்த வாசகசாலைக்கு இன்னும் பல காவியங்கள் வேண்டும். எழுதுங்கள். மக்கள்முன் படையுங்கள். தட்டிக்கொடுக்க நாங்கள் இருக்கின்றோம்.

நேசமுடன்
*வண்ணை தெய்வம்*

# உள்ளே இடம்பெற்ற கவிதைகளை புனைந்தவர்கள்

பி. சி. ராஜகருணா
எஸ்.' வரதராஜன்
ரவி-செல்வத்துரை
பவா-தேவேந்திரன்
சந்திரலிங்கம் அருந்தவம்
வல்வை சுஜேன்
பகீரதி சுதேந்திரன்
சுகந்தினி சுதர்சன்
நவஜோதி யோகரட்ணம்
பிரியா குலராஜன்
ஈழநேசன்

மிருசுவில் சிவா
காமினி பரராஜசிங்கம்
இராஜன் முருகவேள்
ஜெயந்தி ஜீவா
மேகலா குரு
நகுலா சிவநாதன்
விக்னா பாக்கியநாதன்
ஈழமகள்
ரமணி
விக்கி நவரட்ணம்
வண்ணை தெய்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா

ப். சி. இராசகருணா
யேர்மனி

செவ்வானம் போல பரந்த மனம் கொண்டவளே!
அன்பாலே எனையாட் கொண்டவளே! அம்மா!
பத்து மாதங்கள் தவமிருந்து எனைப் பெற்றாள்.
துன்பச்சுமைகளை இன்பமாகத் தான் கொண்டாள்.
தெய்வீக வழிகாட்டி, நல்வழிகள் காட்டி நிற்பாள்.
தெய்வீக தரிசனமே இறுதிவரை வருமென்பாள்.
வண்ண வண்ணத் தமிழாலே பாக்கள் தான் இசைப்பாள்
அம்மா என்று சொன்னால் தமிழன்னை தான் சிரிப்பாள்.

சேலைத்தலைப்பெடுத்து முகம் துடைத்தபோது
உலகத்தையே நான் மறந்தேன்.
சோலைக் குயில்களின் குரலைவிட- என்
அம்மாவின் குரல்வளம் இனிமைதான்.
சோலைக்குள் நின்று ஆராரோ பாடிவிட்டால்
சோலைகள் கூட தலையாட்டி நடனமாடும்
மாலைப்பொழுதினில் அடிப்பானைக்குள்- சோறு
இல்லாதபோதும் இன்பமாக எமக்கு உணவளிப்பாள்.

பிணி என்னை வாட்டியபோது ஆறுதல் கூறிட
அம்மா அருகினில் இல்லையென மனம் அழும்
பணிந்து வாழ்ந்தால் பார் போற்ற வாழலாமென
அறிவுரைகள் கூறி நல்வழிகள் காட்டி நிற்பாள்.
கோவில் மணியடித்தால பிள்ளை வருவானென
விதியில் வந்து என்வரவை காத்துநிற்பாள் -இன்றும்
ஜோதியாய் என் மனதில் வீற்றிருக்கின்றாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் ஒரு பிறப்பெடுத்து-நான்
உந்தன் மகனாக பிறந்திட வேண்டும் -அம்மா
எல்லோருக்கும் அம்மா இருக்கின்றாள்
யாருக்கும் இன்னொருமுறை கிடைக்கமுடியாவள்
அம்மா.. அம்மா.. அம்மா..

# நாங்கள்

## ஈழ முருகதாசன் ராஜகருணா யேர்மனி.

பேரம் பேசி வாழும் பேடித் தமிழனே- எங்கே ஓடுகின்றாய்?
நாங்கள் யார் என்பதைக்கூடவா மறந்து விட்டாய் மறத்தமிழனே!
சிங்களவன் சதிவலையால் தடுமாறி விட்டதா தமிழினம். இல்லை!
சுட்டெரிக்கும் அக்கினிக் குஞ்சுகளின் சகோதரராக மாறிவிட்டோம்
நாங்கள் தமிழர்கள்தான் இதில் என்ன சந்தேகம்- நாங்கள்
தமிழ்தாயின் வீரத் தவப்புதல்வர்கள் என்று கூறு
மானிடனுக்குள்ளே வேற்றுமையை வேர் அறுத்து
புது வீரம் பாச்சும் அறிவியல் தமிழர்கள் என்று நெஞ்சு நிமித்திக்கூறு

வயிற்றுப் பிழைப்பிற்கே வாழ்ந்து விட்டால்
வருங்கால சந்ததி எம் தலைமுறையை பழி கூறும்
வேண்டாம் இன்னும் விதண்டா வாதம் - நாங்கள்
தொலைதூரப் பார்வையைதான் தொலைத்தோம்
சிதறிக்கிடக்கின்றோம் வேதனையில் வெந்து துடிக்கின்றோம்
தேசங்கள் மாறி மாறி தேடி அலைகின்றோம்
முகம் தொலைத்த தமிழர்களாய் ஆகிவிட்ட நிலையிலும்
சிந்திக்க மறுக்கின்றோம் சீரழிந்து வாழுகின்றோம்
மந்தைகள் போல் ஓடி ஓடி ஓய்ந்துவிட்டோம்
ஈழமண்ணே எங்கள் சொந்த மண் என்று எங்கள்
வரும்கால சந்ததிகட்கு கூறுங்கள்
வெற்றி! வெற்றி! நாங்கள் தமிழர்களாக வாழ
தமிழீழம் வெற்றி பெறட்டும்.
நாங்கள் நாங்களாகவே வாழ்வோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்கள்

பி.சி.இராசகருணா
யேர்மனி

அம்மா என்ற குரல் எழுந்திட்ட எங்கள் மண்ணில்
சும்மா இருப்பாரோ எங்கள் மக்கள்
நாங்கள் உயர்ந்தவர் என்னும் இறுமாப்பு கொண்டது போதும்
நாங்கள் தமிழர்கள் என உலகம் போற்றவைப்போம்
நாங்கள் இனத்துவேசத்தின் எதிரிகள்
நாங்களே அதை அனைவர்க்கும் உணர்த்தவேண்டும் -இன்று
நாங்கள் சொந்த மண்ணில் அகதியானாலும்- தமிழீழம்
வெல்வோம் வெற்றி முரசோலிப்போம்.

ஈழமண்ணில் புத்தகச்சுமையாலே வலிக்கின்ற கைகளும்
ஏழ்மைநிலை வந்தாலும் ஏடு தூக்க மறவாதவர்
ஈழமண்ணில் யார்கண் பட்டதோ தெரியவில்லை
நாங்கள் அலைகின்றோம் நாடு, நாடாக அகதியாக
நாங்கள் ஒற்றுமையாக ஒன்றுபடாமல் தனித்து நின்று
பயன் என்ன கண்டோம் -நாங்கள்
நாங்களாக இருப்பதற்கு நேசக்கரம் நீட்டிநிற்போம்
வாருங்கள் தமிழர்களே வாருங்கள்.

சொந்த மண்ணை விட்டு புலம் பெயர்ந்து புழுவாக
துடித்தது போதும்! இடப்பெயர்வு வேண்டாம்
சொந்தங்களை இழக்கின்ற புலம் பெயர்வும் வேண்டாம்.
கண்ணீர்க் கதைகள் சோகப் பிரிவுகள் வேண்டாம்
நாங்கள் தமிழர்கள். பாசத்தின், நேசத்தின் புதல்வர்கள்
நாங்கள் புலம் பெயர்ந்து வந்தாலும் -நாங்கள்
ஈழமண்ணின் மைந்தர்கள்தான் -அகதி வாழ்வில்
அலைகின்ற தமிழர்கள் நாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் எல்லோரும் வேண்டிக்கொள்வோம் -இன்று
நாங்கள் படுகின்ற துயரங்கள் -எங்கள் அடுத்த
தலைமுறைக்கும் தொடரவேண்டாம் -நாளை
எமது தலைமுறை இன்பமாக வாழ
இன்று ஒன்றுபடுங்கள். தேசத்தின் விடுதலைக்கு
நாங்களும் தோழோடு தோழ் கொடுப்போம்
ஈழமண் விடுதலைபெற அகில அகதிவாழ் தமிழர்களும்
கைகொடுப்போம் நாங்கள். எம்மினம் வெற்றிபெற.

*திரு. இராசகருணா அவர்கள் 'ஈழம் என்ற பத்திரிகையை நடாத்தியவர். இவருடைய எழுத்துக்கள் நூல்களாக வெளிவந்திருக்கின்றன. பல எழுத்தாளர்களை வளர்த்துவிட்டவர். அத்துடன் நல்ல தமிழ் அன்பரும் கூட*

# வசந்தம்

*எஸ். வரதராஜன் -ஜேர்மனி.*

சொந்தங்கள் எதுவுமின்றி
சோகங்களை சுமந்துகொண்டு

அன்பு காட்ட யாருமின்றி
அழுது வேதனை கொண்டு

வாழும் வாழ்க்கையிலே
வறுமையும் தாவிக்கொள்ள

துயரங்களை பகிர யாருமின்றி
துன்பங்களை சுமையாக்கிக்கொண்டு

பட்ட மரமும் துளிர்விடுமென்று
பருதவிக்குது மனது

அது போகும் இதுவும் போகும்
வீசும் அது வசந்தமாய்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா

## தமிழ்மகள் --சுவிஸ்

என்னை இந்த உலகுக்கு
அறிமுகப்படுத்திய அம்மா
அன்பின் உருவம் நீ
தியாகத்தின் மெழுகுவர்த்தியாய்
கண்ணை இமை காப்பதுபோல்
காத்துவந்த தாயே
பத்து திங்கள் சுமந்து
பகல் இரவாய் விழித்து
தன் சுகம் துறந்து
நம் நலன் காத்த
தியாகச்சுடர் விளக்கே
கரைகாணத அன்புக்கடலே
உவமை கூற முடியாத
உன்னத தாயே
வேதனைகளை சோதனைகளாக்கி
வாழும் உயிருள்ள ஓவியமே
பதினொரு வருடங்கள்
உன்பிரிவால் துயரடைந்தேன்
என் தந்தையை இழந்தேன்
அன்று பார்த்து நினைவுடன்
இன்றும் வாழ்கிறேன்
எப்படியாவது என் அம்மாவை
பார்த்திட எண்ணி- என்
தாய்மண்வந்து உங்கள்
ஆசைமுகம் பார்த்துவந்தேன்
பார்க்க முன்வேறு கவலைகள்
பார்த்தபின் வேறுகவலைகள்
ஆகபோகிறது என்வாழ்வு
அம்மா என்தாய் மண்ணை
மறக்க முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்விற்காய் வதைபடுகின்றோம் வதைபடுதலில் வாழ்கின்றோம்.

## தமிழ் மகள் (கலா ரஞ்சன்)

சொந்த நாட்டைவிட்டு வெளிக்கிட்டோம்
வாழ்விற்காய் வதைபடுகின்றோம்
என்ன செய்வது வெளிக்கிட்டு விட்டதால்
வதைபடுதலில் வாழ்கின்றோம்.

வாழும் நாட்கள் சிலதான்
அந்த நாட்களுக்குள் என்னதான்
சாதித்தோம்? ஒன்றுமில்லை
பூச்சியம்தான்!

ஒன்றுமில்லை சொந்த மண்ணிலும்
வாழ்விற்காய் எம் உறவுகள் -அங்கே
வாழ்விற்காய் வதைபடுகிறார்கள்.

மொத்தத்தில் அன்னிய நாடுகளிலும்
வாழ்விற்காய் வதைபடுகின்றோம்
வதைபடுதலில் வாழ்கின்றோம்.

வாழும் நாட்கள் கொஞ்சம்தான்
அதைக்கூட நிம்மதியாக
வாழமுடியவில்லையே என்ன செய்வது?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் உணர்வாய் எழுவீர்கள்

## தமிழ் மகள் கலா ரஞ்சன்

கார்த்திகை இருபத்தி ஏழில்
மீண்டும் உணர்வாய் எழுவீகள்
உங்கள் கல்லறைகள் கூட
நிமிர்ந்து நிற்பபதைக் கண்டேன்
உங்கள் தளராத உறுதி கண்டு
திகைத்து நிற்கிறோம்.

நீங்கள் மரணித்தவர்கள் அல்ல
எங்களுள் மௌனமாகிப் போனவர்கள்
மெழுகுதிரி தன்னை உருக்கி
பலருக்கு ஒளி கொடுப்பது போல
உங்கள் வரலாறும் அப்படித்தான்
மீண்டும் உணர்வாய் எழுவீர்கள்

கணப்பொழுதில் காவியம்
படைத்தவர்கள் நீங்கள் அன்றோ
மாபெரும் சரித்திரம் படைத்தவர்கள்
தமிழ் மானம் காக்கப்
புறப்பட்ட தியாக தீபங்கள்
மனவலிமை மிக்கவர்கள்
மீண்டும் உணர்வாய் எழுவீகள்.

ஈழ மாதா பெற்றெடுத்த
மறத்தமிழ் வைரங்கள்
வானத்து விடி வெள்ளிகள்
உங்களுக்கு எங்களின்
கண்ணீர் அஞ்சலிகள்
மீண்டும் உணர்வாய் எழுவீர்கள்.

நாளை மலரும் தமிழ் ஈழத்தில்
மகிழ்வுடன் வாழ்வதற்காய்
உங்களுக்கு மரணம் கிடையாது
மீண்டும் தமிழனாய் பிறந்திடுவீர்
தமிழ் மண்ணின் மடியினிலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் நானாக இல்லை

ரவி செல்லத்துரை -பாசல்-சுவிஸ்

செலவு வந்தபோது கையில் காசிருக்கவில்லை
கையில் காசு,வந்தபோது செலவிருக்கவில்லை

பசி இருந்தபோது கையில் உணவிருக்கவில்லை
கையில் உணவுவந்தபோது பசியிருக்கவில்லை

காதல் இருந்தபோது அவள் கிடைக்கவில்லை
அவள் கிடைத்தபோது நெஞ்சில் காதல் இல்லை

தாய் இருந்தபோது மனதில் பாசமிருக்கவில்லை
நெஞ்சில் பாசம்வந்தபோது தாய் இங்கு இல்லை

தந்தை புத்தி சொன்னபோது அறிவிருக்கவில்லை
அறிவு வந்தபோது தந்தை இங்கு இல்லை

நல்,நட்பு கிடைத்தபோது நான் நண்பனாக இல்லை
நண்பனாக நினைத்தபோது நல்,நட்பு கிடைக்கவில்லை

இல்லை இல்லை எனக்கு என்றும் இல்லை
அதனால் இன்று நான் நானாக இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா

## திருமதி.பவா தேவேந்திரன் பிரான்ஸ்

அம்மா, இம் மண்ணில் எனை ஜனனித்து
மறு உலகம் சென்றதேனோ-அன்று
அன்பு, கருணையை, உம் முகத்தில்
கண்டேன்-இன்று
அம் முகத்தை காணாது
அலை பாய்ந்து தவிக்கின்றேன்.

வாழ வைத்த என் அம்மா-நீ
காலத்துடன் கலந்துவிட்டாய்!-என்
பாழும் மனம் இன்றும்
தாழாமல் தவிக்குதம்மா

மீண்டும் வருவாய்! மீண்டும் வருவாயென
தூண்டுதே என் மனம்
மாண்டு நீ போனாலும் நிதம்
தோன்றுகின்றாய் என் கனவில்

உலகில் உன் மகள்
உறங்காமல் வாழ்கின்றாள்
விலகிய நாட்களை
விரட்டியே பிடிக்கின்றாள்
நிழலாக நீ தானம்மா-என்முன்
நிஜத்துடன் நிற்கின்றாய்
தலை வணங்குவேன் உனக்காக-இத்
தரணி மண்ணில் வாழும்வரை

உரிமையில் கண்டித்தாய்
பொறுமையில் உயர்ந்து நின்றாய்
வறுமையை விரட்டினாய்-நரை வருமுன்
நம்மை விட்டு பிரிந்துவிட்டாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுமையைத்தந்தாய்
புகழுடன் வளர்த்தாய்
சிறப்பினைக் கொடுத்து
சிரித்து வாழ விட்டாய்
இறப்பினில் கலந்ததனால்
இரத்தத்தைத் துடிக்கவிட்டாய்

அம்மா! என் இனிய அம்மாவே!
ஈரேழு பிறவி நமக்கிருந்தால்
மீண்டும் உன் வயிற்றில் நான் கருவாகி
உம் பிள்ளையாய் பிறக்கவேண்டும்

# கார்த்திகை இருபத்தி ஏழு

*சந்திரலிங்கம் அருந்தவம்–பிரான்ஸ்*

கால தேவதை கூட
கலங்குகின்ற நாளா ?
கார்த்திகை இருபத்தி ஏழு

பெற்றவர்களை மறந்து
பேரின்பத்தைத் துறந்து
பற்றுவைத்த தாய் நாட்டை
பாதுகாக்கப் போராடி
சாதனைகள் புரிந்து
சமாதிகளாகிவிட்ட
சகோதர சகோதரிகளுக்கு
ஆசையுடன் இருந்து
ஐந்து நிமிடமேனும்
அஞ்சலி செலுத்துகின்ற நாளா?
கார்த்திகை இருபத்தி ஏழு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயசு வரவுமில்லை
வாழ்ந்து பார்கவுமில்லை
உடலை மண்ணுக்குள்ளும்
உயிரை விண்ணுக்குள்ளும்
மறையவிட்ட மாவீரர்களை நினைத்து
புல்லரிக்கும் அந்த புனிதமான இருபத்தி ஏழை
வல்லரசுக்கு எங்கே தெரியப்போகுது
வருடமொருமுறை வந்து போகுது என்று

சடுதியாக உங்கள் சாவு வந்தாலும்
சாந்தியடையமட்டோம் என்று உங்கள்
ஆவி சொன்னாலும்
உறுதியோடு போராடுகின்ற உங்கள்
உடன் பிறவா சகோதர சகோதரிகள்
இறுதிவரை போராடி தமிழ்
ஈழம் கண்டு உங்களுக்கு
ஏற்றிவைக்கும் தீபம்
எந்தக் கார்த்திகை இருபத்தி ஏழு என்று
சொரிகின்றது எங்கள் கண்ணீர்
ஆனால்
சொல்லமுடியவில்லை.

# சந்திக்கின்றன

*.சந்திரலிங்கம்–அருந்தவம் –பிரான்ஸ்*

கிழக்கும் மேற்க்கும் சந்திக்கின்றனவா ?
ஆமாம்
உதிக்கின்ற சூரியனின் உறவினிலே.... சந்திக்கின்றன

வடக்கும் தெற்க்கும் சந்திக்கின்றனவா ?
ஆமாம்
வருடங்களுடனே ..... அவை சந்திக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைக்கின்ற இறைவன் நம்மை சந்திக்கின்றானா ?
ஆமாம்
பக்குவம் அடையும் நிலையில்...... சந்திக்கின்றான்.

வானும் நிலவும் சந்திக்கின்றனவா?
ஆமாம்
வந்து போகும் மழையுடனே......அவை சந்திக்கின்றன.

இரவும் பகலும் சந்திக்கின்றனவா ?
ஆமாம்
ஒன்றின் முடிவிலும் அடுத்ததின் தொடக்கத்திலும்.... சந்திக்கின்றன.

இன்பமும் துன்பமும் சந்திக்கின்றனவா ?
ஆமாம்
இடைவேளை ஒன்றின்போது......அவை சந்திக்கின்றன.

இயற்கையும் செயற்கையும் சந்திக்கின்றனவா ?
ஆமாம்
வெப்பமடையும்போது சந்திக்கின்றன.

உண்மையும் பொய்யும் சந்திக்கின்றனவா ?
ஆமாம்
உணர்ந்து கொள்ளும்போது.... அவை சந்திக்கின்றன.

பிரிவும் பிணைப்பும் சந்திக்கின்றனவா ?
ஆமாம்
புரியும் நிலை வரும்போது சந்திக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்ந்த தானம்

*வல்வை சுஜேன்*

உயர்ந்தவன் நானென்று
உள்ளத்திலே ஊனம் உற்று
இறப்பிலே ஈனம் உறும் மனிதா!

மான்புடையோன் மகனென்று
தாழ்வு நிலை எண்ணம் உற்று
அன்னதானம் அள்ளியிட்டால் போதுமா?

கண்ணியத்தை காத்துவிடு முன்னால்
புண்ணியம் நிலைத்திருக்கும் பின்னால்.

கொட்டிவிடும் குருதியினால்
எட்டிவிடும் ஆயுளுக்கு
சொட்டு இரத்தம் தந்தாலே போதும்

மரண வாசல் காணும் உயிர்
மீளும் போது னனத்தில்
இறைவனையே உன்னுருவில் காணும்

அடிமையல்ல என்றெழுந்து
விடுதலை வாங்கி வர
வளர்ததிருக்கு வேஙகையினம்
உயிர் யாகம் -அந்த
வேள்வியிலே ஊற்றிவிடு
குருதி துளி நீயும்

சன்னம் பட்ட உடல் தனிலே
அங்கம் விட்டு சிந்தும் குருதி
தந்திட எழுந்தே வாரும்

வேங்கை தந்திடுவான் நிந்தனுக்கு
தமிழீழம். பாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாசகத்தின் யீவன்களே
யாசிக்கும் நிலை எதற்கு?
இரும்பல்ல நிந்தனுக்கு இதயம்

படையணி எழுந்து
பகைவனை வீழ்த்திடவே
கொடை கொடு நெஞ்சே இக்காலம்

இழ வேணிற் காலத்தின்
இழம் பேடு குயிலும்- கனல்
வீழ்ந்து கூவ மறந்த போதும்
களம் வென்று வருகிறார் பாரும்

நிலம் மீழும் நேரம் இது
நீ உறங்கும் காலமல்ல!
வானத்தை தொடுதே கடலும்

துளி கொண்டு வந்துவிடு
சேரட்டும் விடுதலை வேருக்கே
செங்குரதி நீரும்.

# மனித மனம்

## *வல்வை சுஜேன்*

வனக் குயிலே உன் பாடல்
தினம் தினம் ஒலிக்கும்
பிறற்கென வாழா மனசிற்கு- ஏனோ
உன் குரல் கசக்கும்

ஆண்டு நூறு ஆயுளை கண்டும்
ஆசையின் வயசு முதிர்வதில்லை
கொள்ளுமிடம் கொள்ளா அளவில்
வான மீன்களை அள்ளிடவே ஆசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைக்குயில் உனக்கு இறக்கையிருந்தும்
பறப்பதில்லை நீ கனவலையில்
பறக்குது பறக்குது மனித மனம்
கூண்டை விட்டு தினம் வான் வெளியில்

நிறம் மாறும் மனசே விலகிவிடு
வேர்க்குது சிலைக்கும் நிலா ஒளியில்
ஒளியலை தொடாத இடங்களெல்லாம்
தொட்டிட துடிக்கும் உன் விழியலையில்

மலருக்கு மலரென தாவும் மனமே
மலரிதழ் உன் பஞ்சணையல்ல
ஆடி முடிந்தால் ஆறடி நிலமே
சோலை நிலமும் சொந்தம் அல்ல

பாலை வனத்தில் பயணித்திருந்தால்
தாகம் உனக்கு புரிந்திருக்கும்
வாழ்வினில் புயல் வீழ்ந்திட கண்டால்
உதிர்ந்திடும் சருகென வீழ்ந்திடுவாய்

உதிரும் முன்னே எழுந்துவிடு
மழைத்துளி தரும் முகில்லெனவே
அருவிக் கரை ஓரத்திலே
ஆசைக் குமிழிகள் உடையட்டும்

மனமே மனமே மயங்காதிரு
மலரினம் போலே கலங்காதிரு
புலரும் போதில் மணம் வீசு
மாற்றான் தோட்டத்து மல்லிகை போல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகங்களும் முகங்களும்

'.வல்வை சுஜேன்

பேச்சுக்கும் மூச்சுக்கும்
அகங்களும் முகங்களும்
உயிர் வாழ்வுக்கு துணையின்றி
பறிப்பதேன் ? தினம் குளிகளும்

சீர் கொன்று வாழும்
நேர் கெட்ட அகமே
மலர் தோட்டம் மேய்ந்து
மாலையிட்டு வாழ்வதேன் ?

அகம் ஒன்று வாழ
முகம் ஒன்று தந்து
பரம பிதாவின் பாதம்
சுமைதனை கொடுத்தாலும்

பாவத்தின் சம்பளம்
கை இருப்பை அகலாது
அடி தொடரும்
உன் ஆயுட் காலம்

விடியாத வாழ்வுக்குள்
சுய விடிவை தேடு
விலை போகாதே
வீணரின் கையிற்கு

இல்லாத உறவு சேர்ந்து
இலையொன்று போடுகிறாய்
கல்லாத மனிதர் என்று
உறவையே மாய்க்கிறாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிவாளம் இன்றி
காளையின் ஓட்டமோ?
புரிந்தும் புரியாமல்
விவாதிக்க மன்றமா?

மனிதம் மறந்தாய்
உன்னை மறந்தாய்
மண்ணையும் மறந்தாய்
உன் அகத்தை விதைப்பதற்கோ?

பருத்த பலாவில்
முகத்தில் முள்ளிருந்தும்
அகம் எல்லாம் தந்திருந்தும்
சுளை கொண்ட இனிப்பு

இருள் இன்றி இமை விலக்கு
விடி வானில் விளக்கு
அகம் வாழும் முள் அகன்று
இனிக்கும் சுளையாகட்டும் இதயம்

மெல்லத் திறக்கும்
உள்ளக் கதவில்
புனிதம் பிரவேசித்து
மனிதம் வாழட்டும்.

# தூயவள்

## *வல்வை சுஜேன்*

தூயவள் எனக்கோர்
தூது விட்டாள்
கலந்தேன் காதலில்
காமுற வில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் வாசல் அளைத்து
வாழ் வழிந்தேன்
வசந்த ஊஞ்சலிலே
ஆடி நின்றாள்

வஞ்சியிவள் சொந்தம் என்று
அந்தி நேர பொழுதெல்லாம்
யார் யாரோ
இவள் அருகில்

இதழோடு இதழ் சேர்ந்து
இழந்தேன் மது அருந்தி
இன்ப ராகம் பாடுகிறார்
யார் இவர்கள்?

நாலு கால் பந்தலிட்டு
நாள் வைத்த மல்லிக்கு
எத்தனை உறவுகள்
இறக்கை விரிக்கின்றன

வெள்ளை மலரே - நீ
என்றும் தூயவளே
நானும் உன்
நாளாந்த காதலனே.

# மலரின் மரணம்

## வல்லை சஜன்

மலரே நீ...
அழகே அழகு
மூடிய ஆடைக்குள்
நீ கன்னி மொட்டு
காற்றும் உன் இதழ்
தொட்டதில்லை கன்னம் இட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிட்டுக்களின் சிங்காரம் கேட்டு
ஏன் விரித்தாய்?
உன் இதழை நாணம் விட்டு

பட்டுக் குஞ்சம் நடுவே
நீ சொட்டுத் தேன்
கொடுத்தாலும்
சிட்டுக்கள் உன் இதழ் மேல்
நகம் கொண்டு
வைத்துப்போவது
ரணங்களின் வடு

மலரே
அழகெலாம்
உன்னில் படைத்தவன்
ஆயுளை ஏன் வைத்தான்?
சிறு எல்லையில்

# நினைவின் நிழலாய்

பகீரதி சுதேந்திரன் —யேர்மனி

வாசலோரம் குரோட்டன் வைத்து
வடிவழகு பார்த்த நாட்களும்
முற்றத்து மணலில் பாட்டியிடம்
முதுமைரை கேட்ட பொழுதுகளும்
இழமை மட்டும் நிலைக்குமென்று
நம்பியிருந்த காலங்கள்
நம்மைவிட்டு ஓடியதேனோ ?

அதிகாலை துயிலெழுந்து
அடுக்கு மல்லி பூவெடுத்து
அழகான மாலை தொடுத்து
அம்மனுக்கு ஆராதனை செய்து

ஆலயம் சென்ற உவகையில்
மனமது ஊஞ்சல் ஆட
மனக்கவலையில்லாது
மகிழ்ந்திருந்தோம் அன்று
இன்று கோயிலெல்லாம்
குண்டு மழை பொழிய
மக்களெல்லாம் அகதியாக
தஞ்சமென்று வருவோரை
தாங்கவும் முடியாமல்
தரணியது வெதும்புகிறது.

கொஞ்சி விளையாடிய மண்ணில்
பஞ்சம் பசியென்று கேட்கையில்
நெஞ்சமது தாங்காமல் அழுகின்றதே
மஞ்சம் காணும் மங்கையரும்
மலரவேண்டிய மொட்டுக்களும்
வஞ்சம் தீர்க்கப்படுவதை அறிந்து
மனமது கனக்கிறதே

பசுமையான நினைவுகள்
பசுமரத்தாணிபோல
மனமதில் பதிந்திட
மனமென்னும் வீணையிலே
நினைவு எனும் நாதம் சேர்த்து
இசை மீட்டுகின்ற வேளையிலே
வீணை நரம்பும் விம்புகிறது
ஈழ மண்ணின் நிலை அறிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவிலும் சரியாத சரித்திரங்கள்

பகீரதி சுதேந்திரன் –யேர்மனி

மண்ணின் மலர்விற்காய்
மடி தவழ்ந்த மண்ணிற்காய்
கண்ணின் மணியான
தாயகத்தைக் காப்பதற்காய்

கொடுமைகள் கண்டபோது
கொதித்தெழுந்து நின்றவர்கள்
மடமைகளை அழித்து
மாவீரர் ஆனவர்கள்
விடுதலை வரலாற்றின்
விடி வெள்ளிகளே!

உதிரத்தைச் சிந்தி
உயிர் நீத்த மறவர்களே
உங்கள்
சரீரங்கள் ஆழிந்தாலும்
சரித்திரத்தில் வாழ்கின்றீர்.

# இதயச் சுமை

பகீரதி சுதேந்திரன் –யேர்மனி

என் இதயத்தில் வந்து நிதமும் மோதும்
நினைவுகள் சிந்திக்க வைத்து
சிறைப்பிடிப்பதுண்டு
நேற்றுவரை இடம் கொடா இதயம் தன்னை
அன்பிற்கு அடிபணிய வைத்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரில் கண்டு அறிமுகம் கொண்டு
உண்மைபற்றி அறியுமுன்
உள்ளமதைப் பரிமாறி
உவகை கொண்டேன் - இன்று
பிரிவென்று வரும் பொழுது
பிதற்றுகின்றேன் நினைவில் மூழ்கி

உன் விழிகள் கூர்மையானவை -என்று
வர்ணித்ததாலா?
அதைக் கணையாக்கி
என் மீது தொடுத்தாய்?
உடைவது என்னிதையமமானலும்- அதன்
உள்ளிருப்பது நீயல்லவா?
பகவத் கீதையும் படித்துவிட்டேன்
காதல் கவிதையும் எழுதிவிட்டேன் -ஆனால்
உன் மனம் மட்டும்
புரியவில்லை எனக்கு.

# சுமைதாங்கிகள்

## *சுதந்தினி சுதர்சன் –யேர்மனி*

சுமைகள் யாவும் சுகமானவையே
சுமப்பவர்கள் யாவரும் சுமைதாங்கிகளே
சுமக்கும் இதயங்கள் யாவும் சுமப்பவையே
அதன் உணர்வுகள் யாவும் உயர்வானவையே
விசித்திரமான இந்த உலகம்
பவித்திரமான சுமைதாங்கிகள் பலவிதம்
அவற்றின் உள்ளர்த்தங்களோ
உளக்கிடைக்கையில் உறைந்திருக்கும்
ஊமத்தப் பூக்களாய்
ஈழத்தாய் அவளை இன்னும்
காத்துக்கொள்பவர்கள் மாவீரர்களே
எம் மண்ணின் மா வித்துக்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் புயலின் கோரத்தில் தமது
தேசத்தை வேகவைத்து
ஈழத்தாய் அவளின் மானத்தை
தோள் மீது தாங்கி நிற்கும்
சுமை தாங்கிகள் எம் மாவீரர்களே
வீரத்தின் விழுதுகளாய் பொழுதுகளை
கழித்திடும் பொன்மணி வீரர்களே
எமது ஈழ தேசத்தின் சுமைதாங்கிகள்
சாவினைத் தோள்மீது சுமந்து
எதிரிகளின் பலத்தை அளந்து
தமது சுகங்களை துறந்து
துட்டர்களை அழிப்பதற்காய்
துச்சமென உயிர்களை கொடுக்கும்
பிஞ்சுகளே எம் மண்ணின் சுமைதாங்கிகள்
சிங்கள பேய்களின் இடிதாங்கிகளை
உடலில் கொடிதாங்கிகள் கொண்டு
இன்னும் எமக்காய் சுமக்கும்
சுமை தாங்கிகள்
எம் தேசத்தின் வீரர்களே.

# வசந்தம்.

## திருமதி.சுகந்தினி சுதர்சன் –யேர்மனி

சந்தம் பாடும் தென்றல் காற்றின்
அந்தம் தேடும் இரவல் உணர்வுகள்
பூவில் மகரந்தம் தேடும் தேனிக்கள்
கள் உண்ட மயக்கத்தில் கவிபாடுவதும்
அதன் வசந்தமே.

தந்தம் அது களிறுக்கு பெரிதும் விலைகொடு
அரிய பொருள்
அது சிந்தும் இரத்தத்தில் பறிபோகும் சிலரால்
பறித்தவர்க்கு அது வசந்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தல் போட்டு வாழைகள் கட்டி
சொந்தம் கொள்ளும் நிகழ்ச்சி
புதுவரவில் வசந்தம் சுகந்தம் பாடும்
சுந்தரம் கொண்ட முகமலர் சரமாடும்
வாணியின் கைபொருள் கானவீணை நாதம்
ஒரு வசந்தம்.

வசந்தம் ஏனோ வம்பு தும்பாய்
வரவு செலவு பார்க்கும்
மரக்கட்டைபோல் மதியெல்லாம்
தொலைத்த பிணமாக
மரத்துப்போகும் உணர்வுகளில்
வசந்தம் தேடுவது எங்கு?
அது ஏனோ எமக்கு
சொந்தமில்லாத பொருளாக
சும்மா தள்ளி நிற்கும்.
கந்தல் புடவைகள்
வனிதையர் மானம் காக்கும்
வரட்டு வாழ்வில்
வசந்தம் ஏது ?
பொத்தல் போட்ட
புழுதிபுரளும் சட்டைகள்
மங்கையர் உடலில்
கோணிப்பையில் அகப்பட்ட கருவாடாக
வாடிநிற்கும் அவர் வதனங்களில்
வசந்தம் எங்கோ வான் வெளிகளிலே
வத்தல் மிளகாய்போல்
செத்துப்போன வாழ்வுகளில்
வசந்தம் வீசும் என்ற வார்த்தைகள்
வரிகட்டும் குடிமக்களாய்
வயிற்றெரிச்சலுடன்
வானை நோக்கிய பூமியான
புதவசந்தத்தின் சுகந்த மணத்திறகு
ஏங்கும் எம்குலத்து மக்களுக்கு
வசந்தம் ஏனோ வரவில் அல்ல செலவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழிக்கு ஒரு செய்தி

## நவஜோதி-யோகரட்ணம்-லண்டன்

(பிரபல எழுத்தாளர் அமரர் அகஸ்த்தியர் அவர்களின் புதல்வி)

விந்தையான உலகமிது தோழி—பல
வேதனைகள் நிறைந்ததடி தோழி
நாடு விட்டு வந்தோமடி தோழி—படும்
வேதனையை நானறிவேன் தோழி

பெண் அடிமை சமத்துவம் என்றும்
சம தர்மம் பேண வேண்டும் என்றும்
போராட்டம் செய்தார்கள் தோழி
பெண்கள் அடிமைகள்தான் தோழி

கணவனை நம்பிவந்தாள் தோழி—அவன்
வேறொருத்தி வலையினிலே தோழி
ஆச்சரியமில்லையடி தோழி
வெளிநாடுகளில் நடக்குதடி தோழி

கற்பனையில் வந்தவள்தான் தோழி—கடும்
சிந்தனையில் ஆழ்ந்துவிட்டாள் தோழி
உலகத்தைப் பார்க்கின்றாள் தோழி—வெறும்
போலியென்று உணர்கின்றாள் தோழி

காசு பணம்தான் உறவு இன்று தோழி
பாசம் விலை பேசுதடி தோழி
நேசம் இங்கு ஏங்குதடி தோழி
நேசிக்க ஆள் இல்லையடி தோழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரோடு உறவாக

நவஜோதி-யோகரட்ணம்- லண்டன்

தேனினும் இனிய உயிர்
தேன் மொழியே எங்களது
மேலான தலைமகளே
மேன்மை சேர் நாயகியே!
ஜோதிப் பிழம்பென
ஒளி பாய்ச்சும் சித்திரமே!
என்றே எனை வர்ணித்த
உயிரான என் தெய்வங்களே!

உறவொன்றை இழந்து
உருகிடும் வேளையிலே
உயிரோடு உறவாக—மறு
உயிரினில் புகுந்தாய்
மகிழ்ந்திடும் மழலையின்
மொழியினில் நின்று
மனது நிறுத்தினேன்
கொஞ்சி வளர்த்ததை அன்று.. ..

# முள்ளும் மலரும்

பிரியா.குலராஜன்–பிரான்ஸ்

என் மலரும் நினைவுகளில் முள்ளும் உண்டு மலரும் உண்டு
மலரும் மலர் போன்ற நினைவுகள் என்னை மகழ்ந்திடவைக்கும்
மகிழ்ந்திடவைக்கும் என் நினைவுகளில் என் நண்பிகள்
சிரித்துச்செல்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்து செல்லும் என்இனம் சிதறியிருப்பது முள்ளாய் குத்தும்
குத்தும் முள்போன்ற நினைவது என் இதயத்தில் வலியைதர
வலியை தாங்கி நடந்திட்ட இடப்பெயர்வுகள் என்
ஞாபகத்தில் வரும்.

ஞாபகத்தில் வரும் போர்வீரர் இழப்பது என்னை முள்ளாய் குத்தும்
குத்தும் முள்ளது காலில் என்றால் தாங்கிவிடலாம்
ஆனால் அது இதயத்தை நெருடிவிடும் என்றால் எப்படி?

நெருடிவிடும் நினைவுகளில் முள்ளும் உண்டு மலரும் உண்டு
மலரும் நினைவாய் கூடிக்களித்த கொண்டாட்டங்கள்- என்
நினைவில் வரும்.

கொண்டாட்டங்களில் கூடும் பெரியவர்கள் தம்மலரும்
நினைவுகளை மீட்டியது என் ஞாபகத்தில் வரும் ஒரு நினைவு
பாடசாலையில் முதலாம் பிள்ளையாய் அதிபரிடம் நான் பெற்ற பரிசு
பரிசு நான் பெற்றாலும் என்னை முள்ளாய் குத்துவது நான்
இன்னும் எதனையும் சாதிக்கவில்லை என்பது
அதனால் என் வாழ்வில் முள்ளும் மலரும் என்றும் உண்டு.

# ஆன்மீகம்

*பிரியா குலராஜன்–பிரான்ஸ்*

இறைவனை வணங்கவல்ல ஆன்மீகம்
மனிதாபிமானம் உள்ளதே ஆன்மீகம்
அடுத்தவரை பழிசொல்வதல்ல ஆன்மீகம்
அடுத்தவருக்கு உதவுதலே ஆன்மீகம்.

வம்புகள் பேசுவதல்ல ஆன்மீகம்
பண்பு வழிநடத்தல் ஆன்மீகம்
வன்முறை செய்வதல்ல ஆன்மீகம்
மென்வார்த்தை பேசுவது ஆன்மீகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாவிஷேகம் செய்வதல்ல ஆன்மீகம்
கும்பிட்ட கைக்கு உதவுதலே ஆன்மீகம்
அடுத்தவன் கடமையை கெடுத்தலல்ல ஆன்மீகம்
உன் கடமையை சரிவர செய்தல் ஆன்மீகம்.

நன்நெறி நடத்தல் ஆன்மீகம்
நன்நூல்கள் வாசித்தல் ஆன்மீகம்
இவற்றைவிடமேல் ஆன்மீகம் உன்னை நீ அறிதல்
உன்னை நீ அறிந்துவிட்டால் உனக்கும் உன்
சமூகத்திற்கும் பேரின்பம் ஆகும்.

# மதமும் மனிதனும்

*பிரியா குலராஜன் –பிரான்ஸ்*

மதத்தால் மதம் பிடிக்கும் மனிதா கேள்
மதம் உன்னை வழிநடத்தவே அன்றி
மதம் பிடிக்கவைப்பதற்கல்ல
கண்ணன் யேசு நபி சொன்ன மதபோதனைகள்
உன்னை மதம் பிடிக்கவைக்கவல்ல மனிதா!
உன் மதி மயக்கத்தை நீக்கவே மனிதா
மதங்கள் பல நீ மாறி மதம்பிடிக்காதே மனிதா
மதவாதிகளின் வீணாண மதபோதனைகளால்
நீ மதம்பிடித்தே உன் உறவை
அழிக்காதே மனிதா.

மதங்கள் யாவும் ஒன்று கூடவேயன்றி
கூடியிருக்கும் உன்னை பிரிப்பதற்கல்ல மனிதா
கல்வியின் உயர்வால் நீ மதத்தை அறிவாயானால்
மதம் உன்னை பிடிக்காது மனிதா.

என் அன்புள்ள மனிதா கேள்!
நீ அன்பாய் அன்பிற்காய் வாழ்ந்துவிடு
இப்புவிதனிலே என் அன்பு மனிதா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை

*பிரியா குலராஜன் – பிரான்ஸ்*

இயற்கை மகள் உனை பெற்றவர் யார் ?
இறைவன் அவன் வரைந்திட்ட கவிதைதானோ நீ ?
வீழ்கின்ற அருவி அது கொக்கு நிற கூந்தல் ஆக
சூழ்கின்ற கார்மேகம் அது குயில் நிற கூந்தல் ஆக
மின்னுகின்ற நட்சத்திரங்கள் விண்ணில் பூக்கள் ஆக
மலருகின்ற பூக்கள் மண்ணில் நட்சத்திரங்கள் ஆக
பொங்குகின்ற கடல் அது வான் நீலம் ஆக
அமைதியாய் இருக்கின்ற வான்அது கடல் நீலம் ஆக
எதற்குள் எது என்று தெரியாமல் நிற்கின்றேன் இயற்கையே
குரு இன்றி குயில் அது இசைபாட
குரு இன்றி மயில் அது நடனம் ஆட
பூவினில் தேனைவைத்து
கனிகளை தந்திட்ட இயற்கையே
உன்னழகை மறந்து தூங்கிடும் மனிதரும்
நீ தந்த ஜென்மங்கள்தான் இயற்கையே
உன்னை மாற்ற நினைக்கும் எமக்கு
நீ தரும் தண்டனை எமை சூழ்ந்திருக்கும் யுத்தமா?
இயற்கையே ?

# ஏன்?

**பிரியா குலராஜன்.**

ஏன் நாம் பிறந்தோம்?
பிறந்ததனால் பல கேள்விகள் கேட்டோம்
ஏன் எதற்கு என்று கேட்பது ஜனநாயகம் என்று
கேட்டோம் சுதந்திரம் - ஆனால்
ஒற்றுமையை ஏன் மறந்தோம் ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் அடிமை தளத்தைபோக்க போராட
மற்றவர் அடிவருடிகள் ஆனாது ஏன்?
உலகமே உன்னிடம் பல கேள்விகள் ஏன் என்று?
ஒன்றாய் இருந்த உன்னை எல்லைகள் போட்டு பிரித்தது ஏன்?

ஒருவன் களித்திருக்க மற்றவர் கழைத்திருப்பது என்?
இருப்பவனை போற்றி இல்லாதவனை தூற்றுவது ஏன்?
ஒருபுறத்தில் பிள்ளை வேண்டுபவர் இருக்க
மறுபுறத்தில் பிள்ளைகள் அனாதை ஆவது ஏன்?

ஒரு புறம் சமாதனம் என்று சொல்லி
மறுபுறம் சண்டை செய்வது ஏன்?
பெண் விடுதலை பேசும் நாவால்
பெண்ணை நிந்திப்பதும் ஏன்?

# அந்த நாள் ஞாபகம்

## பிரியா குலராஜன் பிரான்ஸ்

இரவில் முல்லை மலர்கள் பூத்து குலங்கிய வானில்
விடிகாலை பொழுதில் செம்பருத்திப்பூவாக
கிழக்கு திசையில் சூரியனை கண்டு
புதியதோர் பாதையில் அடியெடுத்து வைக்கும் ஆனந்தத்துடன்.
எழுந்து நான் விடிகாலைப் பொழுதில் விடிவெள்ளியை
பார்த்துக் கொண்டே கிணற்றுத் தண்ணீரை மெண்டு என்னில் ஊற்றி
பல் கிடுகிக்க பனியில் நின்று மலர் கொய்து மாலையாக்கி
துவிச்சக்கர வண்டிதனை மிதித்து
சுதமலை அம்மன் கோவிலுக்கு பறந்து சென்ற
அந்த நாளைத்தான் மறக்கமுடியுமா?
சுதுமலை அம்மன் கோவிலில் நடந்திட்ட
காவியத்தைதான் என் மனம் மறக்குமா ?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டுக்கோடு கீறி அதில் கெந்தி விளையாடி
தோற்றால் அழுது வென்றால் சிரித்து
முல்லைக்குவித்து கோடிழுத்து வீடு கட்டி
சிறு பானையில் சோறு சமைத்து
அம்மாவிடம் கறி கடன் வாங்கி
குழைத்துண்ட அந்த நாள் மறக்குமா ?

மரத்தில் தாவும் மந்தியாகி மாமரத்தில் தாவி ஏறி
புளிமாங்காயை பிடுங்கி இனிக்க இனிக்க தோழிகளுடன்
ஒரு துண்டுக்காய் சண்டையிட்ட பறித்துண்ட காலம்தான் மறக்குமா?

தலைவாரி அம்மா கறுப்பு றிபன் கட்டிவிட
வெள்ளைச் சீருடையில் வெள்ளைப்புறாவாக
அடக்கு முறையை எதிர்த்து
ஊர்வலம் சென்ற அந்தகாலம்தான் மறக்குமா ?

குடு குடுப்பையில் உள்ள கிலு கிலுப்பை
குழந்தைகளை பூரிக்கவைக்க
கிலு கிலுப்பைக்காரன் தன் குடுப்பையை குலுக்கியபடி
நல்ல காலம் பிறக்குது நல்ல காலம் பிறக்குது
எனக்கூவிச்சென்ற
அந்த காலம்தான் மறக்குமா ?

என் இனம் என் நாட்டில் தன் அவல வாழ்விற்கு
நல்ல காலம் பிறக்காதா என
ஏங்கி நிற்கும் இந்,நேரம்தான் மறக்குமா?
இப்புலம் பெயர் அவல வாழ்விலும்
என் அந்த நாள் ஞாபகமாக வரும் இந்நினைவுகள்
இப்புவியின் நின்றும் நான் நீங்கும்போதே
என்னை விட்டு நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவம் அவள்

*தாமரா.சுப்பிரமணியம்–யேர்மனி*

வடிகால் அமைப்பதற்காய் வழங்கிடுங்கள் சிறுஉதவி
மடி இரந்து கேட்டதற்காய் மனமிரங்கிப் பணம் கொடுக்க
வெடிவாங்கப் போனவர்கள் தம்மடி நிரப்பிவந்து
முடிகாக்க அம்மணிக்கு முத்தாக உதவி செய்தார்.

வந்தவைகள் இருந்தவைகள் வாடகைக்கு எடுத்தவைகள்
மந்தையிலே புலியொன்று மறித்து சுருட்டியதுபோல்
அத்தனையும் பறிகொடுத்து யாருமற்று நிற்கையிலும்
அம்மணியின் ஆணவமோ அணுவளவும் குறையிதில்லை.

கெட்ட குடி கெடுமென்று கேள்வியுற்றேன் உண்மையது
பட்டினியால் உழலும் பாமரனின் இல்லமெங்கும்
கொட்டுகின்ற குண்டுகளின் கோரநிகழ்வுகளை
சிரித்தபடி உலாவந்த சிங்களத்தின் கிபீர்எல்லாம்
சிறகொடிந்த நிலையினிலே செத்துக் கிடந்ததுவோ.

தேற்றுவதற்க்கு யாருமில்லை தேர்ந்தெடுக்க நாடுமில்லை
மாற்றுவழி ஏதுமல்லை மடியினிலே பணமும் இல்லை
கூற்றுவனும் கயிற்றுடனே கொழும்பினிலே காத்திருக்கான்
பார்த்திருக்கப் பறித்திடுவான் பாவிமகள் ஏங்குகிறாள்.

# திசைமாறிய பறவைகள்

*தாமரா.சுப்பிரமணியம்–யேர்மனி*

மேற்குத்திசை நோக்கி
மேடு பள்ளம் பல கடந்து
உற்ற பசி போக்குதற்காய்
உள்ள கூடும்விட்டுவந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் ஏக்கமுடன்
நம்பிக்கை ஒன்றுடனே
வாழ்வுக்காய் துடித்திட்ட
வஞ்சமில்லாப் பறவைகளும்
உயிர்காக்க என்று சில
ஊர் தேசம் பல தாண்டி
சோதனைகள் பல கடந்து
சொந்தம் தேடி இங்குவந்த
சொப்பனத்துப்பறவைகளும்
கடந்து வந்த பாதைகளைக்
காற்றினிலே பறக்கவிட்டு
இரை கூடிப்போனதனால்
இரவல் சுகம் தேடியவை
இருபபவற்றைக்கரையவிட்டு
போதையிலே நான்திளைத்து
பேற்றோரின் முகவரியை
பெரும் நினைப்பால்
தொலைத்துவிட்டு
திசைமாறிப்பறக்கின்ற
தினம்வரும் சேதிகளை
கேட்பதற்குப் பொறுக்குதில்லை
கேட்பதற்கும் யாருமில்லை

## சுதந்திரக் காற்றே என்னைத் தீண்டு

*என்.வீ.சிவநேசன் (ஈழ நேசன்)–யேர்மனி.*

சோகத்தை எல்லாம் நான் மாற்றி
சொந்தங்களை மீண்டும் ஒன்றிணைக்க
வேதனைகள் யாவையும் வெட்டியெறிந்து
மீண்டுமோர் வெற்றி நடை போட
சுதந்திரக் காற்றே எனை த்தீண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணை நாம் காக்கணும் -தமிழ்
மக்களை நாம் மீட்கணும்
மகிழ்ச்சியில் நாம் வாழ்ந்திட
உயர்வை அடைந்திட
சுதந்திரக் காற்றே எனைத் தீண்டு.

தினம் தினம் அழுகின்ற தமிழினத்தின்
கண்ணீரை கரை சேர்க்க
கவலைகளை கப்பலேற்ற
ஒளி பெற்ற நிலம் போல் மனம் மாற
சுதந்திரக் காற்றே எனைத' தீண்டு.

கோழையாய் இருக்கின்ற
எம் நெஞ்சம் குளிரின்றி சூடேற
இறந்தே இருக்கின்ற எம் உணர்வு
ஈட்டிபோல் மாறிட உன் உயிர்ப்பு
என்னிடந்தான் மெல்ல ஏற்றிட மாட்டாயோ?

ஓருயிராய் உடலிற்கு ஓடியே
வந்தென்னுடன் க்கியமாக மாட்டாயா?
சுதந்திரக் காற்றே சொல் சொல்
சோகங்களை எல்லாம் வெல்! வெல்!
என் சொந்தமாகி நில்! நில்!

# புறப்பட்டோம் போருக்கு

**ஈழநேசன்**

நெருப்புத் தீயிலே நாம்
எழுந்து நடப்போம்
வெறுப்பிலே இணையவில்லை
விருப்புடன்தான் நாம்
போருக்கு புறப்பட்டோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செருப்புக்கள் இல்லாமல்
நெருப்பினில் நாம் நடந்து
தடைகள் பல நாம் தாண்டி
சிறைகளின் கதவுடைத்து
சிரிப்பினில் கழித்திடுவோம்

மண்ணில் எரிப்புகள் நடந்தாலும்
கண்ணிவெடி விரிப்புகள் இருந்தாலும்
சிறப்புறச் செயல்ப்பட்டு - எம்மக்கள்
சிறப்புடன் வாழ திறப்புகள் செய்திடுவோம்

அறுப்புகள் பல வந்தாலும்
அறப்படை நாமதனை
விருப்புகள் கொண்டதனை
வெட்டியே சாய்த்திடுவோம்

# எமக்கொரு நாடிருந்தால்

**ஈழநேசன்**

எமக்கொரு நாடிருந்தால் ஏன் இந்த வாழ்க்கையடா?
எமக்கொரு நாடிருந்தால் ஏன் இந்த அவலமடா?

இடிபட்டு உதைபட்டு வெடிபட்டு மடியும் நிலைவிட்டு
தினம் தினம் அடிபட்டு கண்ணீரை வெளிவிட்டு
வதைபட்டு வதைபட்டு நாம் ஏன் வாழவேண்டும்?
எமக்கொரு நாடிருந்தால் இந்த நிலை விட்டுப்போகுமே.

பட்டினியில் பிடிபட்டு படிப்பதனை நாம் விட்டு
குண்டடிகள் தினம் பட்டு குழிகளிலே பதுங்கிவிட்டு
மிதி வெடியில் கால் பட்டு தினம் பலரும் உயிர் விட்டு
இப்படி வதைபட்டு நாம் ஏன் வாழவேண்டும்?
எமக்கொரு நாடிருந்தால் இந்த நிலை விட்டுப்போகுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதியிலே படிப்பைவிட்டு பாவையவள் சிதைக்கப்பட்டு
பரலோகம் போகவிட்டு பார்த்து நாம் இருந்துவிட்டு
இன்னமும் பொறுமையோடு நாம் ஏன் வாழவேண்டும்
எமக்கொரு நாடிருந்தால் இந்த நிலை விட்டுப்போகுமே.
வெளிநாடு செல்ல திட்மிட்டு வேகமாகப் புறப்பட்டு
போடர்களில் பிடிபட்டு அவதிகள் பல பட்டு
அகதியாய் ஆகிவிட்டோம் அவதியுடன் வாழ்கின்றோம்
எமக்கொரு நாடிருந்தால் இந்த நிலை விட்டுப்போகுமே.

பெற்றவரை விட்டுவிட்டு தாய் நிலத்தை விட்டுவிட்டு
உற்றவரை, உறவுகளை மனதிலே மறந்துவிட்டு
எப்படியோ வந்துவிட்டோம் அகதியாய் ஆகிவிட்டோம்
எமக்கொரு நாடிருந்தால் இந்த நிலை விட்டுப்போகுமே.

# கறுப்பு ஆடியே!

*ஈழநேசன்*

கறுப்பு ஆடியே உன்னை
வெறுப்புடன் பார்க்கின்றேன்
கண்களைக் கடலாக்கிய கறுப்பு ஆடியே!
காலத்தால் மறக்கமுடியாத கறுப்பு ஆடியே!

அப்பாவி மக்களைப் பதம்பார்க்க
அன்று பிறந்த கறுப்பு ஆடியே!
அந்த நாளை எண்ணிப்பார்க்கின்றேன்.

நித்திரைவேளையில் சித்திரவதை செய்த
சீர்கெட்ட ஆடியே! நீ என்ன- புத்தரின்
புதல்வர்களின் கையில் ஆடும் பொம்மையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை கொடுமையது அந்தக் கறுப்பு ஆடியில்
கேடிகளின் கையாலே சிறைகளில் வைத்து
தேடித் தேடி எம்மினத்தைக் கொன்று
செந்நீரில் மிதக்கவிட்ட கறுப்பு ஆடியே!-உனை
மறக்கின்ற நாள் ஒன்று மலராதா?-தமிழ்
மறவர்கள் ஆட்சி புலராதா?

கறுப்பு ஆடியே! கறுப்பு ஆடியே!
மறத்தமிழன் இன்று விழித்துவிட்டான்
சிகப்பு மனிதனாக மாறிவிட்டான் -இனி
கறுப்பு ஆடிகள் சிங்கள மண்ணிலும் வரும்.

# நாங்கள்

## திருமதி அலோசியஸ்—காந்தரூபி

அவசரமான உலகில்
அவசரமான வாழ்க்கை வாழும்
அவசரமான மனிதர்களே!
மெதுவாகக் கேளுங்கள்.

அவசரகாலச் சட்டமில்லை!
நாளைய எமது சந்ததி
வாழ்வின் அர்த்தம் புரிந்த-எம்
பெற்றோர் போட்ட பிச்சை.

ஆட்டம் கண்ட உலகிலும்
அசைக்கமுடியாத நம் வாழ்க்கையில்
நாம் போடும் புள்ளியின் கோலங்கள்
அலங்கோலம் ஆவதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளைய வாழ்விற்காக
இன்றைய சந்தோஷத்தை
இளப்பவன் முட்டாள்
இன்றைய வாழ்வால்
நாளைய சமுதாயத்தை
இருளுக்குள் அழைப்பவரை
எப்படி அழைப்பது?-நாளை
உனது வாழ்வின்
சுவடே அழியலாம்!

உனது மொழி
தந்தை இல்லா மொழியா?
தமது பிள்ளைகளின் பெருமைகளை
தம்பட்டம் அடிக்கும் பெற்றோர்கள்
பிள்ளைகள் வாயில்
தமிழே வராதென
பெருமையாக கூறுபவர்கள்
இவர்களும் எங்களோடு.

அன்புப் பெற்றோரே!-நம்
பிள்ளைகள் வாயினில்
தமிழ் வருவது
திம்பு பேச்சுவார்த்தையில்லை!

பிள்ளைகளை வளர்ப்பதுபோல்
தமிழையும் வளர்ப்போம்.
தாயை நினைப்பதுபோல்-தினமும்
தமிழ் மண்ணையும் நினைப்போம்.

மண்ணை மறந்தவர்
மொழியை மறந்தவர்
நாங்களாகவேண்டாம்.
நாங்கள் நாங்களாக வாழ்வோம்
நாங்கள் தமிழர்களாக வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் உயிர் காதலிக்கு

*மிருசுவில்-சிவா*

என் உயிரிலும் உயிரான
என் உயிர் காதலியே
அன்று நீ சொன்ன வார்த்தைகள்

பிறப்பதும் இறப்பதும்
இயல்பு என்றாய்!
பிரிவதும் இனைவதும்
நட்பு என்றாய்

என் அன்பே
உன் நினைவுகள்
மீண்டும் மீண்டும்
என்னை காயப்படுத்தகிறதம்மா!

கூடித்திரிந்ததும்
குலாவி மகிழ்ந்ததும்!
அரவணைத்துக் கொண்டதும்
அன்பாய் உண்டு மகிழ்ந்ததும்
எங்கள் தேசத்தில் அல்லவா?

அன்பு அம்மா அப்பா
அண்ணாவையும் விட்டு!
என் உயிரே நீ
என்னுடன் வந்தாய்!

உன்னைப்பற்றியே
முழுதாய் அறிந்து கொள்ளமுடியாத
இளவயதில் என்னைப்பிரிந்து!
உன்னை கொடுத்து மண்ணைக் காக்க!
எப்படி துணிந்தாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் உயிரே!
குருதியில் நனைந்த அவசரகடிதத்தில்
என் அன்பே என எழுதிவிட்டு
நீ சென்றாய் பின்வந்த செய்தியில்
நான் அறிந்தேன் புள்ளிமான்போல்
துள்ளித்திரிந்த உன் உடல்
அள்ளி அணைக்கமுடியாது
குருதி நனைந்த மணலில்
சிதறிகிடந்ததாம்

சிதறிய உடல்தனை சின்னவன் நான் காணவில்லை
என் உயிரே உன்பணி தொடர என் பாதம் தொடர்கிறது.

# அப்பாவி புறாக்களே!

*திருமதி.காமினி.பரராஜசிங்கம்–யேர்மனி*

குட்டிப்பறவையை
முட்டிமோதி
எட்டி உதைத்து
எக்காளமிடுவதற்கு
எத்தனை எத்தனை வல்லூறுகள்!

வேண்டுமா இந்த
வேண்டாத மோதல்?
இடையில் சிக்குண்டு
சிதையுண்டு போகப்போகும்
அப்பாவிப் புறாக்களுக்கு
அநுதாபம் சொல்வதா!
அல்லது
ஆர்ப்பரித்து எழச்சொல்வதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலரும் விடியலுக்கு கரம்கொடுப்போம்

திருமதி. காமினி பரராஜசிங்கம்—யேர்மனி

மானப்போர் நடக்கும் எங்கள் தேசத்தில்
ஈனர் செய்யும் இழிசெயலால்
விணாகிப்போகும் எங்கள் பூக்கள் வாழ்வை
எண்ணிப்பார்ப்போம் இதயத்தை ஈரப்படுத்துவோம்.

தடையென்ற பேரால் எல்லாமே முடக்கப்பட
உண்ண உணவின்றி உருக்குலைந்து கொண்டிருக்கும்
எங்கள் தேசப்பிஞ்சுகளின் உயிர் முனகும் ஓலம்
எம்செவிகளை துளைத்து விழிகளை நனைக்கிறது.

அரக்கர் வதைகளை அனுதினம் அனுபவித்தாலும்
துடித்து துடித்து துவண்டு வீழ்ந்தாலும்
உறுதியை தொலைக்காமல் எம் சொந்தங்கள்
தாய் மண்ணில் தலை நிமிர்ந்து நிற்கின்றார்.
அவர்கள் உறுதிக்கு உரமூட்டும் கடமை
எங்கள் கைகளிலும்தான்.

ஒரு பிடி உணவை தினமும் உண்ணும் முன்பு
ஊட்டச்சத்தின்றி உயிர்கரையும்
எங்கள் பாசக்குழந்தைகளின்
மங்கிப்போகும் விழிகளை
மனக்கண்ணில் நிறுத்துவோம்.

மாய்ந்து மாய்ந்து வீணுக்கு செலவழித்து
வேண்டாத விளைவுகளை
அறுவடை செய்வதை விடுத்து
எதிர்காலச் சிற்பிகளை
உரமானவர்களாக உருவாக்கும்
உன்னதபணியை உள்ளத்தில் ஏந்துவோம்
புலரும் விடியலுக்கு
கரம் நாம் கொடுப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசதியாகத்தான் ஆனாலும் அகதியாக
*திருமதி. காமினி பரராஜசிங்கம்- யேர்மனி*

தேசம் கடந்து வந்தாலும்
நேசம் எம் அன்னை பூமிமீது
இப்படி எத்தனை பேர்
இப்புலம் பெயர் வாழ்வில்?
ஓடி உழைத்து உண்டு உறங்கி
உல்லாசங்களில் முழுதாக இறங்கி
உண்மை நிலை புரியாமல்
எம் தேசம் இது எமது மொழியும் இஃதே என்று
தாய் மொழியையும் தம்மக்களுக்கு ஊட்ட மறந்து
வாழும் இல்வாழ்வில் எல்லைக்காலம்
எத்தனை மணித்துளிகள் என்பதை
ஏனோ எண்ணிப்பார்க்க மனமில்லை
அன்னிய நாட்டில் வசதியாகத்தான்
ஆனாலும் அகதியாகத்தான்
இந்த நிலை புரிந்தும் புரியாமல்
இன்னும் எவ்வளவு காலம்
எம்மையே நாம் ஏமாற்றிக்கொண்டு ?
தொலை காட்சியே உலகமாக
களியாட்டங்களே சுகமாக
கனவுலகில் அல்லவா காலம் கழிகிறது
உம்மால் எமக்கு இடைஞ்சல்
ஓடிப்போங்கள் எல்லோரும்
உத்தரவு இங்கிருந்து புறப்பட்டால்
ஒரு நொடிகூட நின்று பிடிக்க முடியாத
இரவல் நாடுகள் இவை
எட்டி உதைத்தாலும்
கட்டி அணைக்கும் தாய்போல்
அரவணைத்து எமை ஆற்றுவது
எம் அன்னை தேசம் மட்டும்தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலச்சாரங்களை காற்றில் பறக்கவிட்டு
கடைசி நேரத்தில் கண்ணீர் சிந்தாமல்
இலக்கு எம் தேசவிடியல் என்பதை
இதயத்தில் நிறைத்து
புலம்பெயர் வாழ்வில்
மனம் தளம்பாமல் வாழ்வோம்.

# குருதி குளத்துள் மிதந்தமலர்

*திருமதி.காமினி பரராஜசிங்கம்—யேர்மனி*

அடுக்கு மாடிக்கட்டிடத்திலிருந்து
அந்த மலர் உதிர்ந்து உருக்குலைந்து
குருதி குளத்துள் மிதந்தது ஏன்?
விலகிப்போய் வாழ்ந்திருக்கலாமே
இது சிலரின் வேதனைக்குமுறல்
உள்ளம் நைந்து உணர்வுகள் உறைந்தபின்
வாழ்வு என்பது அவளுக்கு வேண்டியிருக்கவில்லை
அர்த்தம் இருந்தால் மட்டுமே
வாழ்வில் ஜிவன் இருக்கும்
மனதை தொலைத்து விட்டவர்களிடம்
அன்பைத்தேடி தேடி அலைந்து
அவள் களைத்து போய்விட்டாள்
இதனால்தான் விடுதலை காண முடிவெடுத்தாள்
கோழைத்தனமானது
இது உங்கள் விமர்சனம்
இவர்களால் விடிவு காண அவளுக்கு
வழிவகுத்து கொடுத்திருக்க முடியுமா?
எண்ணிலாக்கனவுகள் சுமந்து -அந்த
வண்ணமலர்
இப்புலம் பெயர்வாழ்வில்
காலடி பதித்திருக்கும்- ஆனால்
கனவுகள் சிதைக்கப்பட்டு
உணர்வுகள் வதைக்கப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊமையாய் ஒடுக்கப்பட்டு
உயிர் துடித்தபோது
உலகம் அவளுக்கு
உன்னதமாகத் தெரியவில்லை
ஓலமிட்ட உள்ளத்தின்
கேள்விக்கு பதில்
அழிவில்தான் என்ற முடிவில்
அவள் தன்னை சிதைத்தாள்
விடுதலை கண்டாள்.

# விடியாதே இரவே

## காமினி பரராஜசிங்கம்–யேர்மனி

சோகங்கள் சுமக்கும் இதயத்திற்கு
சுகம் தரும் இதமான இரவே
என் மனம் அறியும் நிஜம் இதுவே
ஏக்கம் பொசுக்கும் எரி நெருப்பு நீயே
மறக்க முடியாத நினைவுகளை
மயக்கும் கருநிறப் போர்வையால் மூடும்
மந்திர வலிமை உனக்கு மட்டுமே!
அதனால்தான் உன்னை இறைஞ்சுகிறேன்
இரவே நீ விடியாதே!.
இந்த மணித்துளிகளுக்குள்தான்
இவள் தஞ்சம் அடைந்து
தவிப்புகளை ஜீரணிக்கின்றாள்
ஓ,வென்று அழுது
ஓப்பாரிவைக்காமல்
ஊமையாய் கரைந்து
துன்பங்களை வடிப்பதற்கு
உன்மடிதான் இவளுக்கு வேண்டும்
அதனால்தான் வேண்டுகின்றாள்
இரவே நீ விடியாதே!
நீ விடிந்தால்
என்மனம் மடியும்
உணர்வுகள் சிதையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளில் நாங்கள்

## இராஜன்.முருகவேல்–யேர்மனி

ஆடுகால் பூவரசும் அசைந்தாடும் துலாவும்
பசுமைகள் விரித்து மண்வளம் சேர்க்கும்
வீசும் தென்றலில் கிளுவையும் முருங்கையும்
குளுமையைச் சுரந்து குதூகலம் பொழியும்
வெறுங்கால் தழுவும் வீதிப் புழுதியும்
கறையான் கொறிக்கும் பனையோலை வேலியும்
சுழிபுர மண்ணின் தனித்துவம் சாற்றும்
கழுத்துச் சலங்கை இசையுடன் விரையும்
திருக்கல்கள் வண்டில்கள் கிராமியம் சாற்றும்.

அதிகாலை பொழுதின் பனிக்காற்று உடல் வருட
பறாளாய் முருகன் கோயில்மணி அருள் பேசும்
எங்கும் வெண்முத்துப் பரல்களாய் என் மண்ணை
இலுப்பையும் வேம்பும் மலர்தூவி எழில் காட்டும்
மனதுக்கும் உடலுக்கும் உற்சாகம் சேர்த்து
எண்ணக்களர் வேற்றும் ஆலயத் தேர் முட்டிகள்
என்மண் சுழிபுரத்தின் சுகந்தப் பொலிவுகள்
அள்ளிட வாற்றாத அமுத சுரபிகள்.

எட்டு மாங்கொட்டை இலுப்பைக் கொட்டையென்றும்
கிட்டி புள்ளு கிளித்தட்டு என்றும்
பனைமட்டை சீவி வளையும் உருட்டலென்றும்
நாங்கள்
தெருப்புழுதி கிளப்பி வெறுங்காலாய் நடந்தோம்

கரகமும் காவடியும் கூத்தும் பாட்டுமாக
ஆலயவீதிகளில் கண்விழித்துப் பார்த்திருந்தோம்
வாலிப முறுக்கில் வளையல் கனவுகளால்
காப்புக் கடைகளுள் சுவாமியையும் மறந்திருந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்த திருவிழா திருவடி நிலை என்றால்
வேட்டிகளில் கிளம்பி இடையினிலே திசைமாற்றி
பனைவட்டுப் பதனீரைப் பருகிப் பரவசமாய்
மீண்டும் பக்தியாய் திருவடி நிலைக்கடலில்
நீந்திக்களித்து அன்ன தானமும் பெற்று
ஆர்த்தெழும் கடலலையைப் புறந்தள்ளும் நாதங்களாய்
போட்டியிடும் தவில்களிலே மெய்மறந்த நிலையேற்று
வீடுவந்த காலங்கள் இன்றும் இனிக்கிறது.

சிவராத்திரி வேளையிலே
டீபபி வெட்டென்றும் முந்நூற்றி நாலென்றும்
சீட்டு விளையாட்டில் சிரித்த பொழுதுகளே- என்
விழியின் ஈரத்தை வந்தொருக்கால் பார்ப்பீரோ?

பள்ளியென்றும் விளையாட்டென்றும்
கள்ளக் குறும்பென்றும் களித்திருந்த போதெல்லாம்
நானாக அல்ல நாங்களாக இருந்தோம்
இன்று
கால ஓட்டத்தில் முகமிழந்த மனிதர்களாய்
அள்ளி எறியப்பட்ட அவலத்தை என்னென்பேன்
உலகப்பந்தில் உதிர்ந்த சருகுகளாய்
முகவரி அற்ற தபால் அட்டைகளாய்
திசைக்கொன்றாய் பிரிந்து
தொடர்பின்றி வாழுகின்றோம்
ஆனால் என்ன ?
மண்ணின் நினைவுகளில்
என்றும் நாங்கள்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன்

திருமதி.ஜெயந்தி ஜீவா –சுவிஸ்

ஏன் ஏனென எம்மில் எத்தனை கேள்விகள்?
எத்தனை கேள்விகள் கேட்க நேரினும்
அத்தனை கேள்வியும் பதிலே இன்றி
சுவரில் எறிந்ததாய் மீண்டும் அவரையே அடைவது ஏன்?

மண்ணிலே மனிதன் உருவாக்கப்பட்டதேன்?
மடியும்வரை வாழ்க்கையில் போராட்டமேன்?
ஆறடி மண்ணில் அடக்கமெனத் தெரிந்தும்!
ஆடாத ஆட்டமெல்லாம் ஆடுவதேன்?

எண் சாண் உடலுக்கு ஒரு சாணே வயிறெனினும்
எலும்பே இல்லாத நாக்கினிலே
பொய்யது ஏன்? புழுகது ஏன்?
சின்ன இதயம் ஏன்? மாயைச் சிரிப்பு ஏன்?
மெய்யது நோக மைய வாழ்வு சிதறுவது ஏன்?

அன்பின் உருவம் அன்னையாயினும்!
தன்னின் உயிரே பிள்ளையாயினும்!
அன்னை பிள்ளைகளிடமும்
வாயிலும் வயிற்றிலும் வேற்றுமை ஏன்?

தொப்பிள் கொடியில் தொடங்கிய வாழ்க்கை
தப்பும் தவறுமாய் சிதறுவது ஏன்?
தோழில் சுமந்த அன்னை தந்தையரை
தள்ளாடும் வயதினிலே தவிக்கவிடுவதேன்?

கைத்தலம் பற்றி தாலி கட்டியே
இல்லறம் அமைத்தவர் நல்லறம் இன்றியே
தன்னிலை மறந்து நாணயம் தவறி
நம்பிக்கைத்துரோகம் இழைப்பது ஏன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்ற தோழனும் நாம் நலிவுற்ற வேளையில்
பாராமுகம் கொண்டு பாதியில் பிரிவதேன்?
துன்பம் ஏன்? துயரம் ஏன்?

துள்ளும் இளமையை கடந்து வந்தவர்
பாதி முதுமை தேடி வந்ததும்
இரவல் இளமையை அடையத் துடிப்பது ஏன்?
வாழ்விலும் நாடகம் நடிப்பது ஏன்?

பொன்னில் ஆசை ஏன்? பொருளில் மோகம் ஏன்?
எமது மண்ணில் அன்னியன் ஆதிக்கமேன்?
எமக்குரியதை அடுத்தவன் அபகரிப்பதேன்?
இன்னும் எத்தனையோ கேள்விகள் எனக்குள்ளே.

புத்தனும், யேசுவும், சைவமும், இஸ்லாமும்,
எத்தனை எத்தனை சொல்லித்தான் என்ன?
சத்தியம் மனங்களில் மறைந்து போனால்!-மனிதம்
செத்த பிணங்களே உலகில் மிஞ்சும்.

# மனச்சாட்சி

## மேகலா குரு(யேர்மனி)

மனம் ஒன்றை வைத்து
மனிதனைப் படைத்து
மண்மீது விட்டு
மாண்புற வாழ் என்று
மனிதவடிவில் கடவுள்களையும்
புவிதனிலே உலவவிட்டு
வாழ்ந்து காட்டியும்
வக்கிரகங்கள்போகவில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்துபோன்ற பூமியிலே
பல நிறத்தில் மனிதனையும்
பல உருவில் விலங்குகளையும்!
பலவித பறவைகளையும்
பல வண்ணப் பூக்களையும்
பல் சுவைக் கனிகளையும்
படைத்தளித்தான் இறைவன்
உயிர்களெல்லாம் வாழவென

மனிதனோ!
தப்பான வழியில்
திரட்டிய செல்வத்தால்
தானம் சில செய்து
தந்திரங்கள் பல வகுத்து
மாஜாலம் செய்கின்றான்
மனச்சாட்சி மறந்து

இவர் புரியும் செயல்களதை
அவனொருவன் பார்க்கின்றான்
அவன்தான் இறைவன் என்னும்
எங்களின் மனச்சாட்சி

# மரணத்தை வென்ற மரணங்கள்

### மேகலா குரு

உடலை நெய்யாக்கி உயிரை திரியாக்கி
உணர்வை ஒளியாக்கி உன்னத தமிழை வளர்க்க
ஊன்றுகோலாய் கல்லறையில் சாய்ந்த நாளன்றோ
கார்த்திகை இருபத்திஏழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவுக்கே சவால்விட்டு சந்ததியை காப்பதற்கு
சாவே துச்சமென சாவுக்கே தேதியிட்டு
சாம்பலாய் போக யாருக்கு துணிவுண்டு ?

தீக்குள் விரலை வைத்தால் சுடும் எனத்தெரிந்தும்
தீக்குள்ளே சங்கமித்து எதிரியை திறனடித்து
மரணத்தை வென்ற மரணங்கள் நீங்கள்

கார்த்திகேயனுக்கு மாவால் விளக்கேற்றிய நாம்
கார்த்திகை 27ல் உங்களுக்காய் தீபமேற்றி
காரிருள் அகற்றிய கண்மனிகளுக்காய்
கண்கண்ட தெய்வமாய் தமிழ் இதயம் உலாவர
காலம் கனிந்து .வருகிறது தமிழ் ஈழம் மலர்வதற்காய்.

# சுமைதாங்கி

## மேகலா –குரு

சுகமான சுமையாக
தாய்மையை இறைவன்
அளித்தது போதும்!

இல்லறத் தலைவியாக
அன்புடனும் அறத்துடனும்
நடத்திய போதும்
முப்பெரும் தேவியாகி
கல்வி, செல்வம், வீரமதை
அளித்திட்ட போதும்
இயற்கையின் கொடையால்
பூமித்தாய் -பல செல்வங்களை
உயிரினங்களுக்காய்
வழங்கி வந்த போதும்

ஆசையின் வசப்பட்ட மனிதர்களால்
ஆண்டாண்டு பண்புடனே வாழ்ந்த மக்கள்
பரிதவித்து பார் முழுதும் வாழ்ந்த போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றதாயும் பிறந்த நாடும் பெரிதென்று
எண்ணி பேர் சூழ்ந்த வேளையிலும்
தம் இனத்தின் விடுதலையை சுமந்து நிற்கும்
வீரமிகு போராளிகள் சுமைதாங்கிகளே.

உயிருடனும் உடலுடனும் சுமந்து நிற்கும்
உறவுகளின் உணர்வுகளில் கலந்து நின்று-நாடு
நலம்பெற நாமும் கரம் கொடுத்து-நாமும்
சுமைதாங்கிளாய் மாறிடுவோம்.

# தியாகத்தின் நாயகன்

திருமதி.சற்குருநாதன் –யேர்மனி

தித்திக்கும் தமிழுக்கு தீங்குவர
பொறுக்க முடியாது பொங்கியெழுந்து
மருத்துவம் படிக்கும் பட்டத்தைத்துறந்து
பார் புகழவைத்த தமிழை ஏந்திவைக்க
நவயுக கண்ணனாக நீ வளர்த்து
தமிழ் அன்னை மானத்தைக் காப்பதற்காய்
அகிம்சையில் உன் உயிரை அர்ப்பணித்து
ஆண்டவன் காலடியை நீ அடைந்தாய்.

உன் தியாகத்தையும் நினைவையும்
மனதில் நிறுத்தி
உன் எண்ணம் நிறைவேற
உழைக்கும் மக்கள்
ஊர்விட்டு ஊர்வந்து
நாடுவிட்டு நாடுவந்தும்
அகதியாய் அலைந்தபோதும்
ஆண்டவனின் அருளால்
அகிலம் எங்கும் தமிழ் ஒலிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் நினைவை சுமந்துகொண்டு
தரணியெங்கும் தமிழ்மணக்க
உன்கனவு....
நனவாகி உறுதியாகும் நேரமிது

# அம்மா

## நகுலா.சிவநாதன் –யேர்மனி

பத்து மாத கருவறையில் சுமந்து
பக்குவமாய் எமை வளர்த்து
பார் போற்றும் உத்தமராய்
பாங்காய் வளர்த்தாயே அம்மா.

அகிலத்தின் சிகரம்-நீயே
ஆருயிராய் அணைத்த தெய்வமும் நீயே
அன்பையும் பண்பையும் ஊட்டியே
அணைத்து வளர்த்தாயே அம்மா.

நோய் நொடி வந்தாலே -நீ
சோராமல் எம்மைக் காப்பாயே
சோதனைகள் வந்துவிட்டால்
சொல்லாமலே தீர்த்து விடுவாயே.

பெண்மையின் பெருமை -நீ
பேரன்பு கொண்ட பெருஉள்ளம் -நீ
பொன்னிலும் மேலான பெண்மையானவளே
போற்றித் துதிக்கின்றேன் அன்னையே உன்னை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவற் தாய்நாடு

## விக்னா பாக்கியநாதன் - யோமனி

அன்னை நாடு தாண்டி அந்நிய நாடு வந்து -நாம்
அகதிகளாக வாழ்கின்றோமே அவனியில்
முன்பின் காணாத சுகபோக வாழ்வுச் சூழலில் -தம்
மரபுகளை மறந்தும் மாதா மொழியையும் மறந்தும்
இன்றிந்தப் புலம்பெயர் நாடே தாய்நாடென -இங்கு
இடாம்பீகமாக வாழ்வதெல்லாம் போலி!
மின்னுகின்ற இரவற்சோலையிலே மயங்கி -அதில்
முத்துக் கொய்யகம் வைப்பது போன்ற வாழ்வு.

எப்படித்தான் என்ன சுகத்தை அடைந்தாலும் -அது
ஒப்பரிதமோ? நாம் பிறந்த மண்ணுக்கு
இப்படித்தான் வாழவேண்டும் என்றெண்ணாது -சிலர்
இஷ்டப்படி வாழ்கிறார் தம்மரபு மறந்து!
ஒப்பாரும் மிக்காரும் தம்மைவிட எவருமில்லை -என
எண்ணிப் பணப் பலந்தரும் கர்வத்தால்
தப்பான மனக்கோட்டை கட்டுகிறார்கள் பலர் -தாம்
தங்கி வாழ்வது இரவற்தாய்நாடு என்பதை மறந்து.

உள்ளளத்தில் எழுந்தவற்றை எழுந்த வேகத்தில் -உடன்
அப்படியே நம்,மண்ணை மொழியில் உரைத்திடும்
உள்ளார்ந்த ரீதியில் களிப்பேருகை கொள்ளும் -ஒரு
ஒப்பற்ற மண்ணில் வாழாவிடில் அது நம்,தாய் நாடா?

துள்ளும் உள்ளத்தோடு சுதந்திரமாய் கால் வைத்து -நாம்
தனித்துவமா வாழ வேற்றுநாடு இடந்தருமா ?
கிள்ளுக்கீரைபோல் சுதந்திர அடிமைகளாக -தம்
காயம் உளைய உழைப்பது இரவற் தாய் நாட்டுக்கா ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனியில் பரந்து நம்மினம் வாழ்ந்தாலும் -அவை
அத்தனையும் நம்,தாய்த்திருநாடாகுமா?
அவாவினால் உழைத்து பொருள் சேர்த்து -இறுதியில்
அந்தந்த மண்ணிலே விட்டுச்செல்வது நம் கதியா?

தவமிருக்கும் முனிவரென தம் ஆசைகள் அறுத்து -சுதந்திர
தாய்நாடொன்றே உயிரென்ற போராளிகள்
நவமான தமிழ். ஈழத்துக்கு தம்மை அடிக்கல்லாக்கின
நாமினி இரவற் தாய் நாட்டை இரட்சிக்கலாமா ?

# நாங்கள்

*திருமதி.விக்னா பாக்கியநாதன்–யேர்மனி*

நாங்கள் நாங்களாக இனம்காட்டிட-சீரிய
எங்கள் பண்பாட்டுக்கோலங்கள் ஆதாரம்
எங்கும் எம்மினத்தவர் பரந்து வாழ்ந்தாலும்-மரபு
தங்கி மேதினியில் நாங்களாக வாழ்வோமே
சங்கம் வளர்த்த காலம் தொட்டு மங்காத நீதி
பொங்கும் பன்னூறு பனுவல்களில் அகத்தினை புறத்தினை
வாழ்வாங்கு வாழும் ஒழுக்கங்கள் நெறிகளை
அங்கமங்கமாக இனைத்தும் அறிந்துணர்ந்து
பங்கமின்றிப் பண்பாடுமாறாது தங்கத்தமிழராக- என்றும்
நாங்களாக வாழ்வதற்க்கு என்றும் நினைப்போமே!

விரிந்தகன்ற இவ்வுலகின் பல்வேறு இடங்களில்
பரந்துபட்டுத் திக்குகளில் வாழ்பவர் நாங்கள்
மண்மாறினாலும் மதமொழிமரபுகளை-அங்கே
கொண்டு சென்று நாற்று நடுபவர் நாங்கள்
வானலையில் தமிழொலி நித்தம் முழக்கமிட
தேனமுதாய் உலகத் தமிழரின் செவியினிலே பாய்ந்திட
ஆங்கதனை அள்ளிப்பருகுபவர்கள் நாங்கள்
தரணி போற்றும் தன்மானத் தமிழர் நாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரணியில் இடம்பெறும் போராளிகள் வாழ்ந்து
தாயகத்துக்காய் போராடும் வேளை வாழுபவர் நாங்கள்
நாங்கள் என்றும் நாங்களே என்று சொல்லி-இனி
எங்கும் ஒழிப்பது எம்மரபுக் கொல்லிகளையே.

நாங்கள் நாங்கள்தான் தங்கம் தங்கம்தான்
தீங்குகள் எம்மினத்துள் புழுவாய் புகலாமா?
வேங்கைகள் சமர் செய்து விடுதலை வேட்கையால்
தாங்களே தம்மையழித்துச் சுதந்திரம் தந்திட
நாங்கள் நாங்களாக அவர் மீட்ட தாயகத்தில்
மங்காத சுயாட்சியுடன் வாழும்போது நாங்களென்ன?
நாங்கள் அவர் தியாகத்துக்கு முன்னிற்க முடியுமா?
நம் தமிழீழத்தில் இனி நாங்கள்தான் பிறரில்லை
தொன்மையான சீரிய எம்மரபை மீறமுடியாமலும்-தமிழர்
இன்று புலம்பெயர் நாகரீகந்தனை ஏற்றிடாமலும்
இரட்டை கலாச்சாரமாகப் போலி வாழ்க்கையிலும்
வரட்டுக் கௌரத்துக்காக வாழ்பவரும் நாங்களா ?

# வேலை இல்லை

## திருமதி.விக்னா பாக்கியநாதன்-யேர்மனி

விடியற் காலைப்பொழுதில் விழித்தெழுந்து-கைப்
பிடித்த கணவனை வேலைக்கு அனுப்பிவிட்டு
மடியிற் குழந்தையை வைத்துப் பாலூட்டிப்-பின்
அடிசிற்கினியாள் ஆரம்பிக்கின்றாள் அன்றாடவேலையை
அதிகாலை முதல் அந்திமந்தாரம்வரை -கடு
கதிவேகத்தில் சுழல்கிறாள் பம்பரமாக
பத்துவயதுப் பிள்ளையொன்றை பள்ளிக்கனுப்பி-பின்
பதிக்கேற்ற பதார்த்தங்களைச் சமைத்திடுவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு பெருக்கி அள்ளி சுத்தம் செய்துவிட்டு -பின்
ஓடியாடி உள்ள வேலைகளைதானே சுமந்து
கூட்டல் பெருக்கல் அவியல் துவையல்-என்றும்
அட்டில் கட்டில் தொட்டில் எனப்பட்ட வேலைகள்
எட்டாது அவள் சேவைக்கு எந்தச் சேவைகளும்
கிட்டாது சம்பளம் வீட்டில் என்பதால்தானோ
மனைவி சும்மா இருக்கின்றா வீட்டில்-என்றும்
பதுமையாய் பத்தினி வீட்டில் இருக்கின்றாள்-என்றும்
பெருமையாய்ப் பேசிடுவார் கனவானான கணவர்கள்.

அழுது அடம்பிடிக்கும் குழந்தையை அனைத்து
அழாதபடி அவர்களுக்கு அன்போடு ஆதரவு கூறி
தருணமறிந்து வேண்டிய பற்பல செய்து
குருவாக நின்று குழந்தைக்கு கல்வியூட்டி
நோயென்று கண்டால்தானும் நோயாளியாகி
தாயாகத் தாதியாக மாறிக்குடும்பத்தைக் கவனிக்கும்
இல்லத்தரசிக்கு வேலை எதுவும் இல்லை-எனச்
சொல்லித் தம்பலம் காட்டும் கண் அவர்கள் -என்ற
சொற்களைப் புணர்த்தினால் வருபவர்கள்-எம்
கணவர்கள் எனும் இல்வாழ்க்கைத்துணைகள்.

*திருமதி.விக்னா.பாக்கியநாதன் அவர்கள் சிறந்த கவிஞர்*
*நூல்கள் பல எழுதியிருக்கின்றார் அதுமட்டுமல்ல பெண்களின்*
*விழிப்புணர்வு பற்றி அதிகம் எழுதி வருபவரும்கூட.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிப்பு

வித்தி–நவரட்ணம் கவீஸ்

ஏழில் செவ்வாய் என்றே
காதல் நெஞ்சுக்கு சிறையிட்டாய்
பிரிவென்று நினைத்தேனா?
பிரிவேன் என்று நினைத்தேனா?
தத்தெடுத்தாய் என் இதயத்தை
தத்தெடுத்த இதயத்தை ஏன்?
உன்னுள் தக்க வைக்கமுடியவில்லை
எத்தனை பகல், எத்தனை இரவு,
எத்தனை பௌர்ணமி
எத்தனை வசந்தங்கள் வந்து போயின
எனக்குள் ஏது? வசந்தம்
நரைதிரை மூப்போடு
நீள் நதி நினைவாக
உன் நினைவில் வாழ்ந்து விட்டேன்

சுற்றம் சூழ பெண் பார்க்க வந்தாய்
சம்பிரதாயம் என்றே பொருத்தம் பார்த்தாய்
பெற்றவர் பெருமை காக்க
ஜாதகம் பொருந்தவில்லை என்றே
சமூகம் பெற்றெடுத்த ஏழில் செவ்வாயை
நீயும் கொலுவேற்றிப் பார்த்தாய்
கொதித்தேன், விழிசிவந்தேன்
சுமந்த மனதிற்கு துணிவில்லை
இரு ஜோடி கைகளில்
ஒரு ஜோடி கை கோர்த்தே
உலகத்தின் ஒரு மூலையில் வாழ
உனக்கு துணிவில்லை
பிரிந்தாய், என்னை விட்டே பிரிந்தாய்
கன்னி என்னை காரிருளில் தவிக்கவிட்டே போனாய்
இன்னொருவளுக்கு மாலை சூடினாய்
விழிச்சிறைக்குள் உன்னைச்சுமந்த நினைவுகள்
இமைமீறிச் சிதறித்தெறித்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளுணர்வின் நெருடல்களால்
கால்கள் பின்னியது
முட்கள் மட்டும் முடிசூட்டு விழா நடத்தும்
இதயம் வாசமில்லா நந்தவனமாகியது
விழித்தேன், உன்னோடு விழியாடிய
விழிகளெல்லாம் விழிநீர் வழிய
புரியாத மௌனத்தை சுமந்த இதயம்
புரியாத அர்த்தங்களை சூட்டும்
நீந்துமா? வெந்நீரில் மீன்கள்!
வாழுமா? கண்ணீரில் காதல்!
வாழ்ந்து விட்டேன் உன் நினைவொடு
உன்னை சுமந்த மனது திணறுகிறது
உன் ஏக்கம் மனசுக்குள் முகிழ்ந்தே சிதறுகிறது
என் ஆன்மா அடங்கப்போவது தெரியுமா? உனக்கு
அடங்கும் என் ஆத்மாவின் திருப்திக்காக
சமூகத்திற்கு ஏற்படுமா? விழிப்பு!
ஏழில் செவ்வாய் என்றே தவித்த
அந்த மரகதப் பொன்வீணை அறுந்தது
இனி எப்படி இந்த வீணையில் இசை மீட்டுவது?
இந்த இதயச்சிறையின் தவிப்பு, புரியாத உயிர்களுக்கு புரிந்தால்
இனியாவது ஏற்படும் விழிப்பு!

# நாங்கள்

புங்கையூர் ராஜா-நெதர்லாந்து

அன்னை மடி தவழ்ந்து
மண்ணினில் பிறந்திட்ட
சொந்தங்கள் நாங்கள்!

சொந்த மண்ணின்
விடுதலையை எதிர்பார்த்து
அன்னிய மண்ணில்
அகதியாய் வாழ்கின்ற
தமிழ் மண் வழிவந்த
சொந்தங்கள் நாங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் தமிழர்கள்!
உறவுகளை மறவாதவர்கள்
உறவுகளுக்கு உதவிட
உரிமையுடன் காத்திருக்கும்
உடன் பிறப்புக்கள் நாங்கள்!

அன்னியரின் படையெடுப்பால்
அன்னை மண் பிரிந்து
புலம்பெயர்ந்தவர்கள் நாங்கள்!
அகதிகள் நாங்கள்!

எம் தேசத்தின் நிலை அறிந்து
தினமும் புலம்புகின்றோம்.
எம் உறவுகளின் நிலை அறிந்து
மனம் வருந்துகின்றோம்.

எம் பாசத்தை தேசத்தில்
பதித்துவைத்திருக்கின்றோம்.
எம் தேசத்தின் விடுதலைக்காக
காத்திருக்கின்றோம்.

அடுத்தவன் தேசத்தில்—நாம்
அகதியாய் வாழ்ந்தாலும்
அனைத்தும் எங்களுக்கு
நிறைவாகவே கிடைத்தாலும்—நம்
தாய் மண்போல் வந்திடுமா?

போரின் கொடுமையால்
தினமும் நம் உறவுகள்
அடிபட்டு மடிபடுவதும்!
உணவின்றி! மருந்தின்றி!
உயிரிழந்து போவதும்!
தொடர்கதையாய் தொடர—இங்கு
நாங்கள் நாங்களாக இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தேசத்தின் விடுதலைக்காய்!
எங்கள் மக்களின் சுதந்திரத்திற்காய்!
எங்களை மாற்றிடுவோம் நாங்கள்!

புலம் பெயர்ந்தாலும்—பிறந்த
கருவறைகளை மறவாதவர்களாய்
வாழ்ந்திடுவோம் நாங்கள்.

# கரும் புலிகளுக்கு காணிக்கை

ஈழமகள் - கவிஸ்

தமிழீழ மண்ணின் விடியலுக்காக
உலாவரும் வீரர்கள் இவர்கள்.
அடிமை விலங்கொழிக்க வீரச்செயல்களால்
அன்னிய அரக்க வெறியர்களை
அழித்துவரும் இவர்கள்
எங்கள் இனத்தைக் காப்பதற்காக
தங்கள் இரத்தம் உறையுமுன்பே
உதிரும் பூக்கள்

உலகிலே இவர்களைப்போன்ற
உயிராயுதங்ள் இல்லை
உயிரை துச்சமென மதிக்கும்- இவர்கள்
உலக அதியமும் இல்லை

தமிழ் ஈழ மண்ணை மீட்கப் புறப்பட்ட
தமிழ்த்தாய் பெற்ற இப் புதல்வர்கள்
நமது இனவிடியலிற்காய்
தீயிலே கலந்துவிட்ட சுதந்திர தீபங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமைதாங்கிகள்

## ஈழமகள் கவிஸ்

சுமைகள் சுகமாகின்றபோது
சுமைதாங்கிகள் சுமக்கின்றன.
சுமைகள் சுகவீனமாகின்றபோது
சுமைதாங்கிகள் சரிகின்றன.

பூமித்தாய் சுமைகளை-தன்
முதுகினில் சுமக்கின்றாள்.
சூரியனோ கிரகங்களை-தன்
ஈர்ப்பில் சுமக்கின்றான்.

வானம் முகில்க் கூட்டங்களை
மடியில் சுமக்கின்றது
கடல் நீரோ அலைகளை
தலையில் சுமக்கின்றது

ஆனால்! ஆனால்!
தமிழீழத் தாயகமோ!
அரக்கர்களின் கொடுமைகளை
சுமக்கமுடியாமல் இரத்தக்
கண்ணீர் வடிக்கின்றாள்.
தனை மீட்கப்போராடி
மடியும் மா,வீரர்களை
மண்டியிட்டுச் சுமக்கினறாள்.

சுமைகள் சுமத்தப்படுகின்றது.
சுமைதாங்கிகள் சுமக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைச் சுமைகள்
வளமாகும்போது சுகமாகின்றன.
வாழ்க்கைப் பாதைகள்
வழி மாறும்போது ரணமாகின்றன.

இதனால்த்தானோ
சுகமான வாழ்வினை
சுமக்கமுடியாதவர்கள்-சுகமிழந்து
சுகவீனமாகின்றார்கள் போலும்?

# வசந்தம்

ஈழமகள்—சுவீஸ்

புலம் பெயர்ந்தோம்! புகலிடம் தேடினோம்!
புரியாத மொழியினுள் புகுந்துவிட்டோம்!
புதிரான பாதையில் பயணிக்கின்றோம்!

ஐயகோ!
வசந்தத்தை தொலைத்துவிட்டோம்!
தொலைந்த வசந்தங்கள்,தொலைந்தவைதான்.

வானமோ வானவில்லைத் தேடுகின்றது-நாம்
புலம்பெயர்ந்து புகலிடம் தேடுகின்றோம்.
புது மொழியினை புலம்புகின்றோம்-தினம்
புது நாகரீகத்தில் புரளுகின்றோம்.

தாயகத்தில்வசந்தகாலப் பறவைகளாய்
வட்டமிட்டு வலம் வந்தோம்
புகலிடத்தில் சுதந்திரம் சிறையில்
தூக்கத்திலும் சிறகிழந்து துடிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதப்போராட்டம் எங்கள் தமிழ் மண்ணில்
புல்லுருவிகளால் புதைக்கப்படுகின்றன.
புனிதச்சடங்குகள் புலம்பெயர் நாடுகளில்
போலியாய் நடத்தப்படுகின்றன.

தமிழ் பாரம்பரியங்கள் -நாகரீக
மோகத்தில் பதுக்கப்படுகின்றன
தமிழ் மொழி பேசுவதுகூட
நம்மவரால் மறக்கப்படுகின்றன.

சொந்தங்களை மறந்து வந்து
சொந்த மண்ணை பிரிந்து வந்து
வந்த மண்ணில் பணத்துக்காய் வாழ்ந்து
வசந்தத்தை தொலைத்தவர்களும் உண்டு!

அர்த்தமுள்ள இந்துமதத்தை-சிலர்
அடியோடு தொலைத்துவிட்டு
அர்த்தமின்றி அடுத்த மதத்தை நாடி
வசந்தத்தைத் தொலைத்தவர்களுந் உண்டு

ஐயகோ! ஐயகோ!
வசந்தத்தை தொலைத்தவர்களே
தொலைத்த வசந்தங்கள் தொலைந்தவைதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் பாடுகின்றேன்.

ரமணி யேர்மனி

சந்தைப் பொருளென அன்பை விலை பேசி,
சகதிதனில் தர்மத்தை தடம் பூட்டி
சந்தனம் பூசி வலம் வரும் தாமரை
சந்தக் கவிதனில் பாடிட மனம் வருமோ?
சொந்தமாய் எனை எண்ணித்,
சந்தமும் துடிக்கின்ற துணையே உனை எண்ணி
சதா கணமும் இதயமது புனைந்து விடும்
கவிகள் தன்னை நான் செப்பிடவா?

பேரத்தில் பாசத்தை ஏலம் விடும் நெஞ்சங்களை
ஓரத்தில் தள்ளிவிட்டு
தூரத்தில் இருந்து என் விழி சொட்டும்
ஈரத்தை துடைத்துவிடும் அன்புதனை-மன
பாரத்தை தாங்கிவிடும் கரங்கள் தன்னை-அன்பு
சாரத்தில் குழைத்துவிட்ட தமிழ் கொண்டு பாடுகின்றேன்.

உருவமாய் என்முன் உறிஞ்சிடும் உறவுகள்
அருவமாய் உன் அறிமுக அழியா நினைவுகள்
பெருகிடும் உனதன்பு ஊற்றில் விரிந்திடும் சிந்தனைகள்
கருவாகக் கொண்டு உருவெடுக்கும் உணர்வுகள்
உருகொடுக்கும் கவிவரிகள் என்றால் இதயத்து
திருவே அது உனது புகழாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியல்

*ரமணி ஜேர்மனி*

முண்டியடித்திடும் உலக வாழ்வின் பேரம்
நொண்டியாகிடும் மனங்களின் சோக சுமைகளின் பாரம்
மண்டியிடம் மனம் நோக்கும் பரம்
மறுபிறவி ஒன்று வேண்டாமே எனும் வரம்

வாழ்வு தந்திட்ட அனுபவப்பாடக் காரம்
விழிகளின் விளிம்பில் கண்ணீரின் ஈரம்
அங்கலாய்ப்புகளில் நிம்மதியின் சோரம்
ஆயுளது ஓடிடும் வேகமோ வாரம்

பிரம்மகவியின் பதிப்போ சிரம்
பிராப்தம் இதுவென்று முயற்சி கைவிட்ட கரம்
விதியை அறுத்திடும் மதியின் அறம்
வினைகளை களைந்திடும் பிராத்தனை ஆரம்

புரிந்திடா மீதியற்ற வாழ்வின் தத்துவ சாரம்
புரிந்திட மனதில் ஞானத்தின் அகரம்-அன்றே
தெரிந்திம்ஆன்மாவிற்கு
விடியலின் விளிம்பின் ஓரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சோடு நினைவுகள் சொல்லோடு வார்த்தைகள்

## வண்ணை தெய்வம்

சொந்தங்கள் உறவுகள்
சோதனைகள் வேதனைகள்- அங்கு

பஞ்சங்கள் பசிகள்
பிஞ்சுகளின் சோகங்கள்!
வெஞ்சிறையில் வாலிபங்கள்!
பஞ்சணையில் வஞ்சகங்கள்.

கொஞ்சமாய்த் திரும்பிப்பார்ப்போம்!
நெஞ்சினிலே வேதனை நினைவுகள்

சொல்லிவைத்தோம்
ஒரு சொல்லுக்காய்
சொல்லிவைத்தோம் -உங்கள்
துன்பங்களும் துயரங்களும்
உங்களுக்கு சொந்தமில்லை

உங்கள் சொந்தங்கள் நாங்கள்
தோள் கொடுப்போம்!-என்று?
சொல்லிவைத்தோம்
ஒரு சொல்லுக்காய்
சொல்லிவைத்தோம் -நாம்

சொன்ன சொல்லெல்லாம்
வெறும் வார்த்தைகள் தான்

நெஞ்சோடு நினைவுகள்
சொல்லோடு வார்த்தைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தத் தேசத்தில்
அன்னியனின் ஆதிக்கம்? -எம்
சொந்தங்கள் மீது
அன்னியனின் அதிகாரங்கள்?

சிறைக்குள்ளும் சில்லறைகளின்
கொலை வெறிகள்-இன்று
சிறைக்குள்ளே தமிழர்களின்
கல்லறைகள்

போதிமரத்து அடியிலிலே
புத்தனுக்கு சமாதி!- அங்கு
காவிகளுக்கும் காக்கிகளுக்கும்
வித்தியாசம் இல்லை

எல்லோரும் கொலைகாரர்களாக
மாறிவிட்ட
கொடியவர்களின் ஆதிக்கம்

எல்லாளன் சங்கிலியன்
ஆண்ட தேசம்-இன்று
புல்லாளர்கள் கையில்
இதுவா நீதி

எமது மண் மீட்க
எமது தேசம் காக்க
எம் இனத்தின் துயர் துடைக்க
எம்மவர் இடர் நீங்க

புலம் பெயராமல் நின்று- இன்னமும்
புலம் பெயராமல் நின்று
போராடுகின்றது இளம் தலைமுறை
களம்தனில் நின்றவர்கள்- புரியும்
கடும் சமர்களில்
வெற்றுச் செய்தியும் வருகின்றது!
எதிரிகளின்
வெற்றுடம்புகளும் வருகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆது மட்டுமா?
விதையாகிப்போன-□எம்
வீர மறவர்களின்
புகழுடம்புகழும் வருகின்றது

நாம் என்ன செய்தோம்?
அவர்கள்
வெற்றிகளை நமதெனக்கொண்டோம்!
இன்னமும்---இன்னமும்
வீறாப்புக்கள் பேசிக்கொண்டோம்!

வெறும் சொல்லோடுதான்!- எல்லாம்
வெறும் சொல்லோடுதான்

எங்களிடம்
நெஞ்சோடு நினைவுகள்
சொல்லோடு வார்த்தைகள்.

# மரணத்தை வென்ற மரணங்கள்!
## வண்ணை தெய்வம்

மலையளவு நெஞ்சுறுதி
வானளவு நம்பிக்கை
கடலளவு போர்ப் பயிற்சி
போர்ப்புலிகள் பிறந்துவிட்டார்

உடல் முழுக்க வெடிமருந்து
திடமுடனே சுமக்கின்றார்
நடந்து செல்வார் அச்சமின்னி- எதிரி
படையணிக்குள் நுளைந்திடுவார்
வெடி முளங்கும் ஒலி கேட்கும்-எதிரி
படை கருகிச் சாம்பலாகும்
கரும்புலியின் உடல் மட்டும்
புகழுடம்மபாய் யொலித்து நிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்முயிரின் தியாகத்தால்
சரித்திரம் படைத்து நிற்கும்
புலித்தமிழன் வரலாறு
மாவீரர் இல்லத்தில்.

நாக்காலும் மூக்காலும்
நாள்முழுக்க பேசியவர்
வாக்காளர் வாக்குகளை
ஏமாத்திப் பறித்தெடுத்து
பாராளமன்றத்தில்
பவிசாக பவனி வந்தார்
சொகுசகளை அனுபவித்தார்
பேசிய கொள்கைகளை
பறக்கவிட்டார்

பாங்காக வாழவேண்டிய
இளசுகள் ஒன்றிணைந்து
வேங்கையாய் மாறினர்
விடுதலைக்காய் விதையாகி
மாவீரர் ஆகினர்

மக்கள் மனங்களில்
பசுமையாய் நிலைத்துவிட்டார்
பாடுவோம் அவர் புகழை
போற்றுவோம் அவர்புகழை
புனிதர்கள் வாழ்கவென்று
இவர்களின் மரணங்கள்
மரணங்களை வென்ற மரணங்கள்

மீசை முளைக்காத
புலிவீரன் போர்க்களத்தில்
சாவை எதிர்த்து
கடும் சமர் புரிகின்றான்

மூச்சுவிட நேரமில்லை
போர்க்களத்தில் சன்னங்களை
பீச்சுகின்ற துப்பாக்கிகள்
இடியோசைபோல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகைவனின் வெடியொன்று
பாய்ந்தது அவன் மார்பில்
பிடி தோழா துப்பாக்கியை
தொடு போரை அவன் மீது
நிறுத்தாதே தொடர்ந்தும்

தொடு போரை அவன் மீது
தொடுவானம் அஸ்த்தமிக்கும் முன்பாக
சுடுகாடாய் மாறவேண்டும்
எதிரி முகாம்- புலி வீரனின்
இறுதி மூச்சும் இறுதிப் பேச்சும்
அதுவாகவே தானிருந்தது
மணியாத தாகம் அவன் மனதில்-
அவனின் தணியாத தாகம்
தமிழ் ஈழம்தான்- அவன்
மரணத்தை வென்றவன்
அந்த மரணங்கள்
மரணத்தை வென்ற மரணங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவல் தாய்நாடு

## வண்ணை தெய்வம்

பத்துப் பிள்ளைகளை
பெற்றெடுத்தாள் என் தாயார்- இன்று
கொள்ளிவைக்க ஒரு பிள்ளை- என்
தாயருகில் இல்லை!

நோர்வேயில் ஒரு மகன்
யேர்மனியில் ஒரு மகன்
பாரிஸில் ஒரு மகன்
பாசல், சுவீசில் ஒரு மகன்
லண்டன், இத்தாலி
கனடா, அமெரிக்கா
ஒல்லாந்து, பெல்ஜியம்
இப்படி இப்படியாய்
எல்லா நாடுகளிலும்
சிதறுண்டு நாங்கள்

பிறந்த மண்ணை
மறந்தவர்கள் நாங்கள்!
பேசிய மொழியை
மறந்தனர் எம் பிள்ளைகள்!

வந்த மண்ணிலே
தஞ்சமாகிவிட்டோம்!
சொந்த மண்ணின்
நினைவுகளைத்
தொலைத்துவிட்டோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெத்தவள் தாய்நாட்டில்
சத்தியம் காக்கின்றாள்!
பிள்ளைகள்
இரவல் மண்ணில்
இன்பம் காண்கின்றோம்!

அம்மாவின்
பிள்ளைகள் பெத்தெடுத்த
பிள்ளைகள் சந்தித்தால்
பாசமாய் பேசுவதற்கு
பாசை இல்லை அவர்களுக்கு!

எத்தனை துயரம்!
எத்தனை கொடுமை இது?
அத்தனை பிள்ளைகளும்
ஒன்றாக சந்தித்தால்
ஊமைப் பாசையில்த்தான்
பேசிடப் போகின்றார்!

காலையில் மலர்ந்து
மாலையில் மாழும்
மலர்களைப் போல
நாளை எமக்கு
நிரந்தரமில்லாத
வாழும் மண்ணை
தாய் மண்ணாய் எண்ணி
மாயையில் வாழ்ந்துவிட்டோம்!
இப்பொழுது தெரிகின்றது
இது இரவல்த் தாய்நாடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியதோர் உலகம் செய்வோம்.

*வண்ணை தெய்வம்*

சொல்லுக்கு சொல் சுவை மிகுந்த செந்தமிழே!-உனை
அள்ளி அணைத்து அழகாகத் தொகுத்தெடுத்து -என்
உள்ளத்தின் உள்ளே உறைந்திருக்கும் எண்ணங்களை
துள்ளும் வார்த்தைகளை கவிதையாய் தொகுத்தெடுத்து-தமிழ்
வெள்ளத்தில் நீந்த வந்தேன் கவிஞன் வண்ணை நான்.

புலம் பெயர்ந்து வந்துள்ளோம் -நாங்கள்
நிலம் பெயர்ந்து வந்துள்ளோம்.

நெல்லுக்கும் புல்லுக்கும் நீரூற்றி வளர்த்த நாங்கள்
கொல்ல வந்த குண்டுகளுக்கு தப்பி இன்று
வெள்ளையர் நாடுகளில் தஞ்சம் புகுந்தோம்
அண்டி வாழ்கின்றோம், அகதியாய் வாழ்கின்றோம்.

எங்கள் மண்ணில் எங்கள் உறவுகள்
தின்டோமோ? குடித்தோமோ? என்றில்லாமல் -தினமும்
குண்டோடு போராடி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்
திண்டாடும் அவர்களை நினைத்திடுவோம் ஒரு கணம்

எல்லாளன் சங்கிலியன் பண்டார வன்னியன்
ஆண்ட தமிழ்த் தேசமின்று
புல்லாளர் கால்பட்டு துவம்சமாய்ப் போயிற்று
எல்லா நாட்களும் இப்படியே இருந்திடுமா?- நாம்
கல்லா கழி மண்ணா? இப்படியே இருப்பதற்கு

புதியதோர் உலகம் செய்வோம் -நாங்கள்
புதியதோர் உலகம் செய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று
படைகொண்டு மோதி வென்ற பாண்டியர் ஈழநாட்டில்
விடைகொண்டு திரும்பிடாமல் வேருன்றி நின்றிருந்தால்
இன்று சிங்களப்
படைக்கூட்டம் எம் மண்ணில் சதிராட்டம் போட்டிடுமா?

விதியென்று சொல்லி நொந்தது அந்தக்காலம்
சதி செய்த கூட்டம் அடியோடு அழியும் -நாம்
புதுயுகம் படைப்போம் புதியதோர் உலகம் செய்வோம்

ஆடு, மாடுகட்கும் வீடு கட்டி கொடுத்தவர் நாம் -இன்று
மரத்தடியில் படுத்துறங்கும் கொடுமைதான் என்ன?
கல்லார்க்கும் கல்வி தந்த கல்விக் கூடங்கள் -வெறும்
கல்லாகிப் புல்லோடு தலை சாய்ந்த கொடுமை என்ன?
வெல்லுவோம் நாங்கள் வெல்லுவோம் -நாம்
புதுயுகம் படைப்போம் புதியதோர் உலகம் செய்வோம்

அரசு உலகிற்கு ஆயிரம் கதை சொல்லும்!
சரசி சந்திரிகாதான் இன்று சமாதானப் புறாவாம்!
போர் என்றால் போர். சமாதானம் என்றால் சமாதானம்
என்றன்று கொக்கரித்தவர் யார் அங்கு!

போர்க் களத்தினிலும் சந்தித்தோம்.
சமாதானத்திற்கும் கை கொடுத்தோம்.
இன்னும் என்ன செய்யவேண்டும் -இனி
புதியதோர் உலகம் செய்வோம்.

அகிலம் இன்று பொய்த்தூக்கம் தூங்கி -ஈழம்
அழிவதை நின்று வேடிக்கை பார்க்கின்றது
புடுத்தவன் எழுந்தால் என்ன? பாடையில் போனாலென்ன?
நடுத்தெருவில் நின்றாலென்ன? நாடு,நாடாய் அலைந்தாலென்ன?
அடிபடுவன் தமிழன் ஆதலால்த்தான் இத்தனை ஏழனம்.
எடுத்திடுவோம் கொடுவாளை எதிரியின் கொடுக்கறுப்போம்.
புதுயுகம் படைப்போம். புதியதோர் உலகம் செய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருதியே ஓடினாலும், உடல் வெடித்துச் சிதறினாலும்
வெடி, வெடியாய் எம் மண்ணில்வேட்டுக்கள் கொட்டினாலும்
படை,படையாய் காடையரை ராணுவமாய் அனுப்பினாலும்
அழுவதில் பயனில்லை. அவன்காலில் விழுவதென்ற கதையில்லை
பொழுது விடியும் நேரமிது உறுதியுடன் எதிர்கொள்வோம்
புதுயுகம் படைப்போம். புதியதோர் உலகம் செய்வோம்.

# யார் இவர்கள்?

*வண்ணை தெய்வம்*

நாம் யார்?எங்கிருந்து பேசுகின்றோம்?

புதை குழிகளை ஏன் பாக்கின்றீர்கள்?
அங்கு இருப்பதெல்லாம்- எங்கள்
சதைகளும் எலும்புகளும்தான்
எங்கள் உணர்வுகள் எல்லாம்
என்றும் என்றும் உங்களோடுதான்.

நாம் யார்? எங்கிருந்து பேசுகின்றோம்?

கோட்டை சிறையுடைப்பில்- எதிரியின்
தோட்டா என்னுடலைத் தீண்டியதால்
துயில் கொள்கின்றேன் இங்கு- ஆனை
கோட்டையிலே அன்றொருநாள்
கூட்டாளி இயக்கத் தோழனொருவன்
காட்டிக் கொடுத்ததனால் -இன்று
துயில் கொள்கின்றேன் இங்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனையிறவு சமரில என ஆட்டிலறி
காட்டிய வித்தைகளால் எதிரியின்
கோட்டையே தகர்ந்ததே! -ஆனாலும்
களத்தில் மார்பினிலே குண்டு பட்டு
வீழ்ந்துவிட்ட தோழனை தூக்கியபோது
தாக்கிய ஒரு குண்டினால்
துயில் கொள்கின்றேன் இங்கு

திருமலையில் நான் வெடியாகச் சென்று
பொடிப்படியாக்கினேன் -எதிரியின்
கடற்படைப் படகொன்றை-ஆதாலால்
துயில்கொள்கின்றேன் இங்கு

புனிதர்கள் என்றும், மா,வீரர்கள் என்றும்
புகழ்பாடும் நீங்களும்
பிணங்கள் என்றும், சதைப்பிண்டங்கள் என்றும்
வசை பாடுகின்றான் எதிரியும்!

சதையும் எலும்புமாய் நாம்
சிதைபட்டு விட்டதனால்
பிணம் என்று நினைத்தானா எதிரி?
விதைகள் நாங்கள். விதைகள்.

முளைப்போம்! தழைப்போம்! எழுவோம்!
மீண்டும் எதிரிகள் கோட்டைக்குள்
வெடியாய் வெடிப்போம்- பின்
மீண்டும் முளைப்போம்! தழைப்போம்

எங்கள் மண்ணிலே பிறந்தோம்
எங்கள் மண்ணிற்காய் உயிர் கொடுத்தோம்.
எங்கள் மண்ணிலே புதைந்தோம்
எங்கள் மண்ணிற்காய் உரமானோம்.-மீண்டும்
எங்கள் மண்ணிலே பிறப்போம்.- மீண்டும்
எங்கள் மண்ணிற்காய் உயிர் கொடுப்போம்
நாங்கள் யார் என்று தெரிகின்றதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீதனம்

## வண்ணை தெய்வம்

அன்று
காசு, நகை, வீடு என்று-நான்
சீதனமாய் பெற்றதற்காய்-
எளனம் செய்தவர்கள் ஏராளம்
எள்ளி நகைத்தவர்கள் ஏராளம்

இன்று
காசு, நகை, வீடு இல்லாததால்
இன்னமும் என் மகள் கன்னிதான்
சீதனம் கொடுக்க எதுவுமில்லாததால்
ஏளனம் செய்கின்றார்கள் என்னை

# வெற்றி

## வண்ணை தெய்வம்

காத்தைப்பார்!அதன் போக்கின் வேகம் பார்!
கடலலையைப்பார்! அது சீறும் வேகம் பார்!
காக்கை குருவிகளும் போகும் போக்கைப்பார்!
காளை நீ மட்டும் காத்திருக்கும் நோக்கமென்ன?

சோத்திற்கா உன் உடம்பு? சோம்பலுக்கா நீ விருந்து?
காத்திற்கே திசை காட்டும் காளையடா நீ!
காத்துக்கிடக்காதே காலம் வரும் என்று.-உன்
மூச்சு உள்ளவரை எதிர் நீச்சலிடு
வெற்றி உனக்குத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை தெரேசா

## வண்ணை தெய்வம்

அல்பேனியாவில் பூத்த மலர்
அக்கினெஸ் என்னும் தேன் கமலப்பூ
பாரதத்தில் தீட்சைபெற்ற
தூயமகள் அன்னை தெராசா.
மானிட நேயத்தால்
மாமரித்தாய்போல் அருள்புரிந்த
நேர்மை, வாய்மை, சேவைத்தாயின்
நிர்மலப் பூ முகம் மறையுமா?

அன்னையே அகிலம் போற்றும் அன்னையே
எம்மை ஈன்றவள் எமக்குத் தெய்வம். -ஆனால்
அன்னையே நீா அகிலத்தவர்க்கும் தெய்வம் -உலக
மண்ணையே அன்பினால்கவர்திட்ட தாயே.

வெள்ளைத் தோலைக் கொண்ட உடம்பு
கறுப்புத் தோல்களை கருணையால் அணைத்தது.
வெள்ளை உடையால் போர்த்திய உடம்பு
சிவப்பு இரத்தமே அனைவர்க்கும் -என
உணரவைத்த மனது.
உள்ளத்தில் இளமையை வலிந்து இழுத்து
வள்ளலாய்மாறி நீா வலிந்து செய்த சேவையால்
தெய்வமாய்த் தோன்றிநீா நலிந்தவர்க்கெல்லாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழையின் சிரிப்பினில் இறைவனைக் கண்டு-உமது
தேகத்தை வருத்தி சேவைகள் புரிந்தீர்.
காலன் பலமுறை தோற்றவன் ஊம்மிடம்
இறைவன் இறுதில் வெற்றியைக் கண்டான்
மக்கள் எங்களைத் தோற்றிட வைத்தான்.
காலம் பல பல கடந்து சென்றாலும்
கதைகள் கவிதைகள் காவியங்களில் நின்று
அழியாப் புகழுடன் அன்னையே நீர் வாழ்வீர்.

கருணைக்கு மறுபெயர் அன்னை தெரேசா!
அன்புக்கு மறுபெயர் அன்னை தெரேசா!- பெண்
இனத்திற்கே பெருமை சேர்த்த அன்னையே -உம்மை
பெயர் சொல்லி அழைப்பது அழகல்ல ஆதலினால்
கருணையே ஏழைகளின் கடவுளே உமை நாம்
அன்னையே என்று அன்புடன் அழைப்போம்.
இன்னுமொருமுறை நீர் மண்ணில் பிறந்திட
நல்ல இதயங்கள் வேண்டுவோம் ஆண்டவனை.

உயர்ந்த இடத்தில் பிறந்து நலம் குறைந்த மக்களுக்காய் வாழ்ந்து
05-09-97 வெள்ளியதினம் இறைவனடி சேர்ந்த அன்னை தெரேசாவிற்கு
செலுத்திய அஞ்சலி

# ஏன்?

*வண்ணை தெய்வம்*

பொல்லாத உலகமிது
எல்லோரும் நல்லவராய்
இல்லாமல் போனது ஏன்?
எல்லோரும் வல்லவராய்
இல்லாமல் போனது ஏன்?

இல்லாமை வந்தது ஏன்?
இயலாமை வுந்தது ஏன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோர்க்கும் வையகத்தில்
சமமான கல்வி நிலை
இல்லாமல் போனது ஏன்?

உயர்வும் தாழ்வும் ஏன்?
பஞ்சமும் பசியும் ஏன்?
வஞ்சமும் சூதும் ஏன்?
பிஞ்சினில் வறுமை ஏன்?

மனிதனுக்கு
சந்தேகம் பிறப்பது ஏன்?
மரணங்கள் நடப்பது ஏன்?

படைப்பவன் இறைவன் என்றால்!
கூன், குருடு, செவிடர்கள்
அவன் படைப்பில் ஏன்?

உலகம்
பிரிந்து கிடப்பதேன்?
போர் மேகம் சூழ்ந்தது ஏன்?
யுத்தங்கள் நடப்பது ஏன்?

மதங்கள் பல தோன்றியது ஏன்?
மதங்களால் மரணங்கள் ஏன்?
இனங்களில் பிளவுகள் ஏன்?
நிறங்களால் பிரிவுகள் ஏன்?

இன்னும் என்னுள்
எத்தனையோ கேள்விகள்
ஏன்? ஏன்? ஏன்?-என
என் மனதினில் எழுகின்றனவே!
அது ஏன்?
நான் மனிதன் என்பதாலா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்

இரண்டாம் பாகமும் வெளியிட வேண்டிய அவசியம் வந்தபோது அனுசரணையாக நின்ற T.R.T. தமிழ் ஒலி நிர்வாகத்தினர்க்கும்.

வாழ்த்துரை, அணிந்துரை, ஆகியவற்றை தந்து சிறப்பித்த டாக்கடர் க. இந்திரகுமார். திரு.சி.காராளபிள்ளை மாஸ்ற்றர். திரு முல்லை அமுதன். ரவி மாஸ்ற்றர். திருமதி.. நவாஜோதி ஆகியோருக்கும்.

எமது எண்ணத்தை அப்படியே பிரதிபலித்து அட்டைப்படம் வரைந்து தந்த திருமதி. சுகந்தினி அவர்கட்கும்.

கணனியில் உதவி புரிந்த திருமதி. சாந்தினி வரதராஜன். செல்வி. வண்ணை தெய்வம் தெய்சியா. ஆகியோக்கும்

இந் நூல் சிறப்பாய் வருவதற்காக வடிவமைப்பில் உதவி புரிந்த பத்திரிகையாளர் எஸ்.கே. காசிலிங்கம் அவர்கட்கும்.

இந் நூலை பணம் கொடுத்து வாங்கி படித்துக்கொண்டிருக்கும் உங்களுக்கும்.


எனது மனம் நிறைந்த நன்றிகள்.

*வண்ணை தெய்வம்*
*தொகுப்பாசிரியர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகமெல்லாம் தமிழ் வளர்ப்போம்

## ரி. ஆர். ரி . தமிழ் ஒலி



# வானலைகளில் எங்கள் கவிதைகள்

தொகுப்பாசிரியர்

**வண்ணை தெய்வம்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வன்னை வரிகளிலிருந்து சில சின்ன வரிகள்

இந்தக் கவிதைத் தொகுப்பில் இடம் பிடித்திருக்கும் கவிஞர்களில் சிலர் கவிதை எழுதுவதற்கு முயற்சித்திருக்கின்றார்கள்! அதே வேளையில் சிலரது கவிதைகள் பிரமிக்கத் தக்கவகையில் இருக்கின்றன.

புத்திஜீவிகள் யாராவது எடுத்த எடுப்பிலேயே இவைகள் கவிதைகளே அல்ல! என சிகப்பு அறிக்கை தாக்கல் செய்து விடலாம்! அவர்களுக்கு ஒன்றை மட்டும் சொல்லி வைக்கின்றேன்

இவைகள் எல்லாம் கவிதைகள் இல்லாமலேயே போகட்டும்! ஆனால் விதைகள்! என்பதையாவது ஏற்றுக்கொள்ளுங்கள். இல்லாது போனால் காலம் கடந்து ஏற்றுக் கொள்வீர்கள்.

மனிதன்தான் சிலையை உருவாக்கினான். பின்பு சிலையை கடவுள் ஆக்கிவிட்டு, தனது படைப்பின் காலடியில் மனிதனே விழுந்து கும்பிடுகின்றான்.

மனிதன்தான் பணத்தைக் கண்டுபிடித்தான். பின்பு அந்தப் பணத்திலேயே மனிதன் மயங்கிக் கிடக்கின்றான்.

மனிதன்தான் இயந்திரங்களைக் கண்டுபிடித்தான் இன்று இயந்திரங்கள் இல்லாமல் வாழமுடியாமல் அவைகளுக்கு கட்டுப்பட்டு, வாழ்கின்றான்.

நாகரீகத்தின் வரலாற்றை உற்றுப்பார்த்தால் தனது ஒவ்வொரு படைப்பினிலும் மனிதன் மயங்கி அவைகளுடன் ஒன்றி விட்டதைக் கண் கூடாகப் பார்க்கின்றோம்.

இவை போல உங்கள் கவிதைகளில் நீங்கள் மயங்குகின்ற காலம் வரும்.

சிந்தியுங்கள் சிந்தனைக்கு உரமிடுங்கள். சித்திரமாக்குங்கள்.

இந்த தொகுப்பினிலே மலரான வாடாத உங்களது கருத்துக்களை, வாசகசாலையாக்கி நடமாடவிட்டிருக்கின்றேன்.

இந்த வாசகசாலைக்கு இன்னும் பல காவியங்கள் வேண்டும். எழுதுங்கள் மக்கள் முன் படையுங்கள். தட்டிக்கொடுக்க நாங்கள் இருக்கின்றோம்.

நேசமுடன்

வன்னை தெய்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org